1082

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 AUG 1956
MADRAS

15-8
1082
3-56

ஸ்ரீ அழகர்

JL
ஜ22ணை211ய
N56/15·8
210731

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	200
2.	த்ரியாமாயாः என்கிற ச்லோகத்தின் அர்த்தம் [ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	205
3.	நல்லோர் ஸந்திப்பு [ஸ்ரீவத்ஸன்.]	207
4.	கண்ணனும் கீதையும் [ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	211
5.	யாருக்கு நமஸ்காரம்? [ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வித்வான், வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	214
6.	செய்திகள்	216
7.	பாக்யபுரியில் ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ் [ஸ்ரீ. உப. பாதூர் ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]	217
8.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	220

முக்கிய அறிவிப்பு

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அடியிற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்குகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ஹு ஆவணி மீ { ஸஞ்சிகை 8

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தலக்ஷாணாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

பகவத்ஸ்ருஷ்டியில் அவசியம் இல்லாதது என்று எதையும் சொல்வதற்கில்லை. ஒரு வஸ்துவின் அவச்யம் ப்ராஹ்மணீடம் ஒருவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். அதனால் அந்த வஸ்து அவச்யம் இல்லாதது என்று அவன் சொல்வது சரியல்ல. இக்கருத்தை முதலில் ஒப்புக்கொள்வது சிலருக்கு ச்ரமமாகத் தோன்றலாம். ஆனால் சற்றே ஆராய்ந்து பார்த்தால் அதன் உண்மை யாவருக்கும் புலப்படும்.

மண்ணெண்ணெய் சுத்தம் செய்து எடுக்கும் ஸமயம் கிடைக்கும் கனரக எண்ணெய், தார் போன்றவைகள் இக்காலத்தில் பலவித வஸ்துக்களை உற்பத்தி செய்ய உபயோகிக்கப் படுகிறதென்பதை விஞ்ஞானிகள் நன்கறிவர். குப்பைமேடுகளில் உற்பத்தியாகும் நாக்குடை எனப்படும் ஒருவித காளான் உயர்ந்த மருந்துக்கு ஆதாரமாக பலர் கூறுகின்றனர். தென்னை ஓலைகளைத் தைத்து போஜன பாத்ரமாக வைத்துக்கொள்பவர்கள் உண்டு. இவ்விதம் நன்கு பராமர்சம் செய்து பார்த்தால் உலகில் உள்ள ஒவ்வொரு வஸ்துவும் ஏதாவதொரு உபயோகத்திற்கென்றே ஏற்பட்டிருக்கிறது.

நம் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அவயவத்திற்கும் ஓர் முக்கிய அலுவல் உண்டு. ஒன்று உயர்ந்ததாகவும், மற்றொன்று தாழ்ந்ததாகவும் கூறுவதென்பது, சரீரத்தின் பொது நலனைக் குறித்துக் கூறுவதல்ல. ஏதாவதொரு குறிப்பிட்ட கார்யத்தை மனத்திற்கொண்டு கூறும் விஷயமேயாகும். ஒரு தேசநலனைக் கோருவதென்பது, தேசத்தின் பாகமாகிய பல விடங்களும், அதிலடங்கிய பலவித ஸமூஹத்தினரும், நற்குண, நற்செய்கைகளுடனிருந்து எல்லோரும் ஸுகமாக வாழவேண்டும் என்பதேயாகும். இக்கருத்தைத்தான் நமது முன்னோர்கள், முக்கால அறிவாளிகள், மனத்திற்கொண்டு ‘உலகில் உள்ள எல்லா மக்களும் க்ஷேமமாயிருத்தல் வேண்டும்’ என. எக்காலத்திலும் ஆசீர்வதித்துவந்தனர்; ப்rார்த்தித்தும் வந்தனர்.

இக்கருத்தை நன்கறியமுடியாத பலர் பலவித மாறுபட்ட கருத்துக்களுடன் கூடிய பழமொழிகளைப் பரப்பி வந்தனர். அவ்வழியே வந்த பலர் வேற்றுமையையே மிகப்படுத்தி ஒற்றுமையை மறந்தனர். ஒற்றுமை, வேற்றுமை என்பதெல்லாம் நமது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவைகளே.

நமது ஸமூஹ அமைப்பில் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து தங்களுக்கென்று ஏற்பட்ட கார்யங்களைச் செவ்வனே செய்து எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைக் கொள்கை.

ஒருவனுக்குக் கண் பார்வை சரியில்லை. அதற்காக சிகித்ஸை செய்துகொண்டான். கண் பார்வைக்குக் கண்ணாடி உபயோகித்தல் அவசியம் என வைத்தியர் கூறினார். அதை அநுஸரித்து கண்ணாடி வாங்கினான். அந்த மூக்குக் கண்ணாடி, மூக்குக்கு ஸொந்தமா, கண்ணுக்கு ஸொந்தமா என விவாதம் வந்தது. ஏன் இந்த விவாதம்? கண்ணும் மூக்கும் சரீர அவயவங்கள்தானே. இரண்டும் சேர்ந்து சரீர நலனைத் தேடவேண்டியதுதானே. இதே

போல்தான் தேசநலனில் ஈடுபடும் பலருக்குள் ஏற்படும் விவாதமும்.

இம்மாதிரி விவாதங்களுக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. நமது வாழ்க்கையில் எந்த நோக்கத்தை முக்யமாகக்கொள்வோமோ அதை யநுஸரித்துத்தான் நமது வ்யாபாரங்களும் இருக்கும். சரீரயாத்ரை கர்மாதீனம். ஆதலால் நமது நோக்கமெல்லாம் ஆமுஷ்மிக ஸுகத்தை ப்ரதானமாகக்கொண்டதாக இருத்தல் வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கி நிற்குமேயாகில் நாம் ஸுகித்திருக்க இடமுண்டு. சரீரயாத்ரை நமது அதீனத்தில் உள்ளதென்று நினைப்போமாகில் நாம் லௌகிகவ்யாபாரங்களில் அதிகமாக ஈடுபட நேரிடும். அப்பொழுதுதான் ஸமூஹத்தில் வேற்றுமைகளும், பிளவுகளும், அதிகரிக்கின்றன.

‘அந்தணர் என்பவர் அறவோர்’ என்றபடி ப்ராஹ்மணன் தர்மத்திலே முழு கவனத்தையும் செலுத்தியிருந்தவரை நம் நாடு க்ஷேமத்துடனிருந்தது. ஆனால் காலவைஷம்யத்தால் மேனாட்டாரின் ஆதிக்கம் நம் நாட்டில் வரவே அவர்களின் ஆட்சிக்கு அநுகூலமாக ப்ராஹ்மணனை தங்கள் வசமாக்கிக்கொண்டனர். அது முதல் ப்ராஹ்மணன் தன் உயர்ந்த கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஆரம்பித்தான். தான் ஏற்றுக்கொண்ட பணியில் வெற்றி பெற்றான். ஆனால் அந்த வெற்றியின் முடிவுதான் என்ன?

பாரதப்போர் முடிந்தது. பாண்டவர்களுக்கு வெற்றிதான் உண்டாயிற்று. எம்மாதிரியான வெற்றி? பந்துக்களும், புத்ரமித்ரர்களும் இறந்தனர். மிகுதியானது ஸ்வல்பமே. அரசர்களும் மற்றைய நாடுகளுடன் போரில் படையெடுத்து வெற்றிபெறுகிறார்கள். ஆனால் அந்நாட்டு மக்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இறக்கிறார்கள்? நாட்டுக்கு நஷ்டம் எவ்வளவு? இதுவும் ஓர் யுத்தவெற்றிதானா? பாரதப் போரில் வெற்றி தர்மத்தை நிலைநிறுத்துதல் தான். மற்றைய போர்களில்கூட அப்படித் தானா? இப்படியெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதேபோல் மேனாட்டவரின் கைப்பொம்மையாக என்றையதினம் ப்ராஹ்மணன் ஆனானோ அன்றே ஸமூஹ அமைப்பு குலைவதற்கு அவனே காரணமானான். தன் முக்யமான கொள்கையை புறக்கணித்தான். பிறர் கொள்கைக்கு அடிமையானான்.

‘உழவுக்கும் அக்னிஹோத்ரத்திற்கும் ஒத்துக்கொள்ளாது’ என்ற ஓர் பழமொழி நம்மிடையே உலாவிவருகிறது. இதன்படி ‘உழவு என்பது ஒன்று’ ‘அக்னிஹோத்ரம்’ என்பது மற்றொன்று. முதலாவது பொருளாதாரத்தைக் குறிக்கின்றது. இரண்டாவது ஆத்மீக தத்வத்தைக் குறிக்கின்றது. இரண்டும் வெவ்வேறு திசைகளில் செல்லும் கருத்துக்கள் போல் தோன்றுகின்றன. உண்மை அப்படியல்ல. இரண்டும் ஒன்றுபட்ட இடத்திற்குச் செல்ல வெவ்வேறு மார்க்கத்தையே குறிக்கின்றன. ஆயினும் வெளித் தோற்றத்திற்கு வேறுபட்டவைகளாகவே காணப்படுகின்றன.

ப்ராஹ்மணன் முதலில் ‘அக்னிஹோத்ரத்தைக் கடைப்பிடித்திருந்தான். பிறகு அதை விட்டு உழவை ஏற்றுக்கொண்டான் அக்னிஹோத்ரத்தை அவனாகவே கைவிட்டான். ஆனால் தற்காலசூழ்நிலையில் ‘உழவு’ தானாகவே இவனைக் கைவிடுகிறது. ஆகவே இரண்டு விதத்திலும் கதியில்லாதவனாக வெகு சீக்கிரம் சரிந்துகொண்டு வருகிறான். இதை உடனே உணர்ந்து ஆவன செய்தல் வேண்டும். இல்லையேல் அவன் அழிவது திண்ணம்.

‘ஶரீரமாத்யம் கலு தர்மஸாதனம்’ அதாவது தர்மத்தைக் கடைபிடிப்பதற்கு முதலில் அவச்யமானது சரீரம். சரீரஸுகமில்லாதவன் தர்மத்தைச் செய்யமுடியாதவனாகிறான். ஆகவே சரீரத்தைப் போஷிக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. போஷிப்பது என்ன என்பதில் கருத்து வேற்றுமைகள் உண்டு. ஒருவனுக்கு அவசியம் எனக் கருதப்படுவது மற்றொருவனுக்கு அதிகமாக இருக்கும். ஜீவித்திருப்பதற்குப் போதிய அளவு உணவு ஏற்றுக்கொள்வது நியாயமாகும். அப்படிக்கின்றி பலவித ருசியுள்ள பண்டங்களை உட்கொள்ளு

வதற்காகவே ஜீவித்திருத்தல் அவசியம் என எண்ணுவது மடமையாகும்.

இவ்விதம் சரீரத்தை நிலைநிறுத்துவதற்கு அவசியமான அளவில் நாமும் பொருளாதார தத்துவத்தை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அதற்குமேற்பட்ட அளவில் நாம் ஆசைப்படுவது முறையாகாது. ('அஸந்துஷ்டோ த்விஜோ நஷ்ட:') திருப்தியென்பதில்லாத ப்ராஹ்மணன் கெடுவான் என்ற வாக்கின் கருத்தும் அதுவேதான். நாம் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு சரீரபோஷணைக்கு 'உழவு' அவசியமாகிறது. க்ருஷி என்பது நிலத்தை மேடுபள்ளமில்லாமல் சுத்தம் செய்வது, உழுவது, நாற்று விடுவது, நடுவது, களை பிடுங்குவது, தண்ணீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல் முதலிய பலகார்யங்களைக்கொண்டதாகும். இக்க்ருஷிக்கு முக்கியமானது நிலமும், நீரும் தான். இயற்கையில் கிடைத்த நிலவளத்துடன், நீர்வளமும் சேரவேண்டியிருக்கிறது. நீர்வளம் இயற்கையாகவே பகவத்ஸ்ருஷ்டியில் ஏற்பட்டிருந்தாலும் கூட காலத்தில் மழை இல்லாவிடில் க்ருஷி ப்ரயோஜனப்படாது. இந்த அநுகூலத்தை நம்மால் ஏற்படுத்திக்கொள்வதென்பது ஸாதாரணமாக முடியாததால், ப்ராஹ்மணன் இதற்குப் பாடுபட்டான் அவனுடைய முயற்சியினால் இந்த அநுகூலம் கிடைப்பதாயிற்று. அதாவது:—

அக்நௌ ப்ராஸ்தாஹுதி: ஸம்யக் ஆதித்யமுபதிஷ்டதே। ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டி: வ்ருஷ்டேரந்நம் தத: ப்ரஜா:॥

ப்ராஹ்மணன் ஔபாஸந, அக்நிஹோத்ரங்கள் செய்தால் அவைகளில் கொடுக்கப்பட்ட ஆஹுதிகள் ஸூர்யனை அடைகின்றன. ஸூர்யனால் மழை ஏற்படுகிறது. வ்ருஷ்டியினால் தான்யங்கள் (ஆஹாரம்) உண்டாகின்றன. அதனால் ஜனங்கள் நிலைத்திருக்கிறார்கள் என்றபடி, ப்ராஹ்மணனின் நித்ய, நைமித்திக கர்மாக்களினால் க்ருஷிக்கு வேண்டிய அநுகூலங்கள் ஏற்பட்டன. ஆகவே உழவு எனப்படும் க்ருஷிக்கு ப்ராஹ்மணனும் தன் பங்கைச் செய்துவந்தான்

இம்மாதிரியான நிலையைப் பரிசோதித்தால் உழவும் அக்னிஹோத்ரமும் ஒரே கார்யத்தை ஸாதித்துக்கொடுத்தன என்பது ஏற்படுகிறது. இவைகளில் உழவு இவ்வுலகவாழ்க்கைக்கு மாத்திரம் ஸாதகமாயிருந்தது. அக்னிஹோத்ரம் என்பது இவ்வுலகவாழ்க்கைக்கு ஸாதகமாயிருந்ததோடு, பரலோகப் பேரின்பத்திற்கும் உபகாரியாக இருந்தது. இம்மாதிரியான இஹ, பரலோகத்திற்குக் காரணமான வ்யாபாரங்களிலேயே ப்ராஹ்மணன் ஈடுபட்டு வந்தான். க்ருஷி எவ்வளவு சரீரப்ரயாஸையோடு கூடியதாகவிருந்ததோ, அதைக் காட்டிலும் சரீரப்ரயாஸையோடு கூடியது தான் நித்ய, நைமித்திக தர்மகர்மாநுஷ்டானங்கள்.

தனக்குரிய வ்யாபாரங்களைக் குறைத்துக்கொண்டு ஸமூஹத்தில் மற்றவருக்கென ஏற்பட்ட வ்யாபாரங்களை என்றையதினம் ப்ராஹ்மணன் செய்யவாரம்பித்தானோ, அன்றுமுதல் ஸமூஹம் குலையவாரம்பித்தது. சிறுவர்களின் கதைப்பகுதியில் கீழ்க்காணும் கதை நமது ஞாபகத்திற்கு வருகிறது. ஒருவன் தன் வீட்டில் ஓர் நாயையும், ஓர் கழுதையையும் வளர்த்து வந்தான். நாய் வீட்டைக் காத்தது, கழுதை மூட்டைகள் சுமந்தது. ஓர் ஸமயம் நடுநிசியில் அவ்வீட்டில் திருடன் புகுந்தான். வீட்டைக் காக்கும் நாய் யஜமானனிடம் அப்ரீதியின் காரணமாய் தன் கடமையைச் செய்யவில்லை. ஆனால் கழுதையோ யஜமானனுக்குத் தெரிவிக்க விரும்பி உறக்கக் கத்தியது. தூக்கம் கலைக்கப்பட்டதால் யஜமானனுக்குக் கோபம் வந்து கழுதையை பலமாக அடித்தான். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது ஓர் முக்யவிஷயம்தான். அதாவது ஒருவனுக்கேற்பட்ட வ்யாபாரத்தில் மற்றொருவன் தலையிடுவதால் அனர்த்தமே விளையும் என்பதுதான்.

இதேபோல்தான் நமது ஸமூஹத்திலுள்ள ஒவ்வொருவரும் தனக்கென்று ஏற்பட்ட கார்யங்களைப் புறக்கணித்து இதர வ்யாபாரங்களில் ஈடுபட்டது, சில நூற்றாண்டுகளில் ஸமூஹ கலகங்களை விளைவித்திருக்கிறது. இதற்

செல்லாம் அந்ய அரசாங்கம் முதற்காரணமாக இருக்கலாம். ஆனால் நாம் ஏன் ஏமாறவேண்டும். ஆசையும், த்ருப்தியின்மையையுமே. சில காலத்திற்கு முன் ப்ராஹ்மணர்களுக்கு விரோதமாகக் கிளம்பிய ஜஸ்டிஸ் கட்சி ப்ரமுகர்கள்கூட உண்மையான கர்மாநுஷ்டானங்களுடன் கூடிய ப்ராஹ்மணர்களை வெறுக்காமலும், பொருளாதாரத்துறையிலேயே முழுவதிலும் ஈடுபட்டு, தங்களுடன் போட்டியிட்டு ஓர் அளவு அத்துறையில் வெற்றியும் பெற்றவர்களிடம்தான் அதிக வெறுப்புக்கொண்டு சச்சரவும் செய்துவந்தனர். ஆனால் நாளடைவில் காலப்போக்கு விபரீதமாக மாறவாரம்பித்தது. உண்மையான தர்மகர்மாநுஷ்டானங்களுடன் கூடியவர்களையே வெறுக்க ஆரம்பித்தனர். இதன் போக்கு மிகவும் விபரீதமாக இருக்கிறது.

பொருளாதாரத்துறையிலேயே முற்றிலும் ஈடுபடாத, பல வைதிகப்பற்றுள்ள ப்ராஹ்மணர்கள், தங்களுக்குக் கிடைத்துள்ள நிலங்களில் க்ருஷி செய்து, தங்கள் உலகவாழ்க்கையை நடத்திவந்தனர். இவர்கள் வைதிகப் பற்றுடன் கூடினவர்களானபடியால் காலங்களில் வைதிக கர்மாக்களையும் செய்துவந்தனர். இவைகள் மிகவும் முக்யம் எனவும் கருதினர். ஆகவே இவைகளுக்கு விரோதமில்லாமல் க்ருஷியில் நேரிடையாக ஈடுபட முடியவில்லை. ஆதலால் க்ருஷிக்கு தங்களுக்கு அநுகூலமாக இதர வகுப்பினரின் உதவியைப் பெற்றுவந்தனர். அவர்கள் உதவியால் க்ருஷியில் ஈடுபட்ட, சரீரப்ரயாஸையை அவர்கள் மூலம் அடைந்து, அதில் வரும் வருவாயைப் பங்கிட்டுக்கொண்டு ஸாதாரண வைதிக வாழ்க்கையை நடத்திவந்தனர். நாளடைவில் இந்நிலைக்கும் கேடு ஏற்படவாரம்பித்திருக்கிறது. நேரிடையாகவே சரீரப்ரயாஸை எடுத்துக் கொள்ளமுடியாத காரணத்தைக்கொண்டுதான் 'உழவுக்கும் அக்னிஹோத்ரத்திற்கும் ஒத்துக்கொள்ளாது' என்ற பழமொழி தோன்றிற்று. உண்மையை பராமர்சித்தால் அக்னிஹோத்ரம் உழவுக்கு உபகரிக்கும் என்பதை நாம் காண்கிறோம்.

நம் ஸமூஹத்தினரில் இக்காலத்தில் க்ருஷியின் மூலம் கிடைக்கும் ஸ்வல்பவருவாயைக் கொண்டு ஜீவனத்திற்கு வேறு வைதிக மார்க்கங்களையும் அவலம்பிக்கும் பலருக்கு மிகவும் துர்தசை ஏற்பட்டுவருகிறது. சரீரப்ரயாஸையையும் ப்ராஹ்மணனே செய்துகொள்ள வேண்டும் என்றும், அவனுக்கு யாதொருவித உதவியும் செய்யக்கூடாதென்றும், இதரர்களிடம் ஓர் மனப்பான்மை பரவி வருகிறது. இம்மனப்பான்மையினால் நமது இந்துஜன ஸமூஹத்திற்கே நன்மை ஏதோ ஏற்பட்டு விடப்போகிறதென்று அவர்கள் எண்ணுவது நடைபெறப்போவதில்லை. நிலப்பரப்பு பரிமிதமானதே. அதை அடையவிரும்புவோர் ஏராளமானவர். எப்படி ஸமமாகப் பங்கீடு செய்துகொள்ளமுடியும். அவஸரம், அஸூயை இவைகளினால் தூண்டப்பட்ட இந்த குத்ருஷ்டிகளின் முயற்சிகள் முடிவில் அவர்களிடமே வேற்றுமையை ஏற்படுத்தி, அதிலிருந்து குழப்பத்தையும், முடிவிலமைதியையும் ஏற்படுத்தும். இதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகலாம். அதுவரை வைதிகனின் கதிதான் என்ன? வேதத்தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட ஸமூஹத்திலுள்ள உண்மைவைதிகப்பற்றுள்ளவர்கள் உடனடியாக யோசித்து தகுந்த பரிஹாரம் தேடிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. சரண்யன்தான் வழி காட்டவேண்டும்.

பதினாறுவது மாலோல வித்வத்ஸதஸ்

ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின்பேரில், ஸ்ரீஸந்நிதியில் (ஹைதராபாத்) ஸஞ்சாரத்தில் பதினாறுவது மாலோலவித்வத்ஸதஸ் வெகு விமர்சையாக நடந்தேறியது.

பகவத்போதாயனர் முதலிய ஆசார்யச்ரேஷ்டர்களின் கருத்தையநுஸரித்து ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு முக்யகாரணமாயிருந்தவர் ஸ்ரீஆளவந்தார். அம்மஹான்

நிர்யாணகாலத்தில் ஸங்கல்பித்த மனோரதத்தை ஸ்ரீபாஷ்யகாரர் பூர்த்தி செய்தார் என்று குருபரம்பரை மூலமாக நாம் அறிகிறோம். ஆகவே ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸ்ரீஆளவந்தார் மறக்கமுடியாத காரணமாக விளங்குகிறார். அம்மஹானுடைய திவ்ய திருநக்ஷத்ரம் ஆடி உத்திராடம். அதுஸமயம் ஸ்ரீபாஷ்ய ஸித்தாந்தஸ்தாபனத்திற்கென்று ஏற்பட்ட வித்வத்ஸதஸ் நடைபெறவேண்டும் என்பது மிகவும் பொருத்தமானது. தை உத்திராடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின்பேரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வித்வத்ஸதஸ், அந்நாளிலேயே இதுவரை நடந்துவந்ததும் பொருத்தமாயிருந்தது. அம்மஹானின் மறைவுக்குப்பின் நம்மாழ்வார் நமக்குக் குலபதியாவதுபோல் ஸ்ரீபாஷ்யகுலபதியாகிய ஸ்ரீஆளவந்தார் திருநக்ஷத்திரத்தில் ஸ்ரீபாஷ்யவித்வத்ஸதஸ் நடைபெறுகிறதென்பதும் நாம் அம்மஹானுக்குச் செய்யக்கூடிய கைங்கர்யமேயாகும்.

வேதாத்யயனம் உபாகர்மாவுடன் ஆரம்பிக்கப்படுவதுபோல், ஆடி மாதத்தில் வேதபாஷ்ய ஸ்ரீபாஷ்யாதிகளின் ப்ரவசன, விமர்சனங்களும் நடப்பதென்பது மிகவும் பொருத்தமானதே. மேற்படி ஸதஸ்ஸில் ஸ்ரீபாஷ்யாதிகாரிகளும் வேதபாஷ்யாதிகாரிகளும் வெகுவாகக் கலந்துகொண்டு பதினொரு தினங்கள் ஸித்தாந்தஸ்தாபனத்திற்கென்றே பல வாக்பார்த்தங்களைச் செய்தார்கள்.

ஸ்ரீஸங்கல்பமஹோத்ஸவமானபடியால் ஸ்ரீமதழகியசிங்கரும் ஸஞ்சாரமின்றிக்கே ஓரிடத்தில் எழுந்தருளியிருந்தபடியால் ஸதஸ், இரவு பகலெல்லாம் ஓய்வின்றி நடைபெற்றதென்பது ஓர் விசேஷாம்சம். ஸாதாரணமாக ஸ்ரீந்ருஸிம்ஹன் திருவாராதனத்தில் அந்வயித்திருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர்களுக்கு ஸஞ்சாரத்தினாலும் சேர்ந்து முழுவேளைகளிலும் வித்வத்ஸதஸ் நடத்துவதற்கு அவகாசம் கிடைப்பது ச்ரமமாயிருக்கும். பூர்த்தியான அவகாசம் தத்காலம் கிடைப்பதற்காகவே இரவு காலங்களில்கூட வேதபாஷ்யஸதஸ் நடந்தது.

ஸ்ரீந்ருஸிம்ஹனின் அவதாரவிசேஷமாகிய ஸ்ரீமதழகியசிங்கரும் ப்ராக்ருதஸம்பந்தமான ச்ரமமென்பதையே கணிசியாமல் எக்காலமும் ஸ்ரீந்ருஸிம்ஹன் திருவாராதனத்திலும், ஸ்ரீஸித்தாந்தப்ரவசனத்திலும் ஈடுபட்டிருந்தாரென்பது தத்கால சூழ்நிலையில், நமது பாக்யவிசேஷத்தினால் ஏற்பட்டிருக்கிறதென்பதும் நமது ஸமூஹத்தைக் காப்பாற்றவேண்டி ஸ்ரீந்ருஸிம்ஹனின் ஸங்கல்பவிசேஷம் என்றும், நாம் எண்ணி ஸந்தோஷப்படுகிறோம். இந்த எண்ணந்தான் தத்காலஸ்திதியில் நம்மைக் காத்துவருகிறது.

பெரியாழ்வார் ஸ்ரிய:பதியை பல்லாண்டு பாடுவதுபோல இம்மாதிரியான நிலை எக்காலமும் நமக்கு நிலைத்திருக்க சரண்யன் ஸங்கல்பிக்க வேண்டும் என நாம் எல்லோரும்ப்ரார்த்திப்போம்.

ஸ்ரீ:

'த்ரியாமாயா:' என்கிற ச்லோகத்தின் அர்த்தம்

துர்முகி வருஷம் சித்திரை மாத ஸஞ்சிகையில் வெளியான ஸம்சயபரிஹாரம் என்னும் சிறிய வ்யாஸத்தின் முடிவில் 'இதன் விரிவு பிறகு' என்று எழுதப்பட்டிருக்கிறது. அதை வாசித்த ஒரு வித்வான் 'அவ்விஷயத்தைப் பற்றி ஏன் எழுதவில்லை' என்று கேட்டதால் அதில் சொல்லவேண்டிய விஷயம் இப்பொழுது சுருக்கமாய் எழுதப்படுகிறது.

ஆசௌச சதகத்தில்

த்ரியாமாயாஸ்த்ருதீயேம்ஶே யதி ஜந்ம ந்ருணாம் த்ருவம் । ம்ருதாதி யதி த்ர்யம்ஶே பூர்வேத்யுர் தினம் வ்யவஹ்ரியதே ॥ என்று ச்லோகமிருக்கிறது. இதன் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்தில்

ராத்ரௌ ஜந்மாதிஸம்பவே தத்ராஶௌச வ்யவஸ்தாமாஹ

த்ரியாமாயா: ... ... இஷ்யதே ॥ ஸந்த்யாகாலவ்யதிரேகேண ராத்ரிர் நாம ஸாரேண ராத்ரிம் த்ரேதா விபஜ்ய தத்ராத்ய பாகத்வயம் விஹாய த்ருதீயாம்ஶே யதி ஜந்ம ந்ருணாம் த்ருவம் ஸ்யாத் ததா ம்ருதாதி... பர தினாதி கணநம் பவதி - அயோரம்ஶயோர்மத்யே ஸாரோ த்ர்யம்ஶம் த்யக்த்வா தினே ஸ்யாத் ததா பூர்வேத்யுர் தினம் வ்யவஹ்ரியதே' என்றிருக்கிறது. இதன் தமிழ் வ்யாக்யாநத்தில் 'பூர்வாபரஸந்த்யைகள் $7\frac{1}{2}$ நாழிகை போக த்ரியாமா என்று வ்யவஹரிக்கப்பட்ட ராத்ரியில் த்ருதீயாம்சத்தில் ஜநநம், ருதுப்ராதுர்பாவம், மரணம் இவை உண்டானால் பரதினம் முதலாகவே தின ஸங்க்யை கொள்ள வேண்டும். முன் தின இரண்டம்சத்திலேயானால் பூர்வ தினம் முதலாகக் கொள்ளவேண்டும். பூர்வ ஸந்த்யை நாழிகை $3\frac{3}{4}$. இரண்டு யாமத்திற்கு 15-நாழிகையுமாக சூர்யாஸ்தமயாநந்தரம் $18\frac{3}{4}$ நாழிகைக்கு உள்ளாகவானால் பூர்வதினத்திலே கூடும். ததநந்தரமானால் பரதினம் முதலாகக் கொள்ளவேண்டும். இதில் ராத்ரிமாநமும் விசாரித்து ததநுகுணமாகக் கூட்டவும் கழிக்கவும் வேண்டுமென்று நிர்ணயம்' என்றிருக்கிறது. இதனால் ஸம்ஸ்க்ருதவ்யாக்யான வாக்யார்த்தம் விசதமாகச் சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தை ஸ்ம்ருதிமுக்தாபலாசௌசகாண்டத்தில் எடுத்துக்கொண்டு அதிலிருக்கும் த்ரியாமாபதத்திற்கு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆசௌசவிஷயத்தில் சொல்லவேண்டிய எல்லா விஷயங்களையும் ப்ராசீன பஹுப்ரமாணக்ரந்தநிர்தேசத்துடன் சுருக்கமாய் தெரிவிக்கும் அபிநவாசௌச ஸங்க்ரஹத்தில் 'ராத்ரௌ ஜந்மாதிஸம்பவே யாமத்ரயாத்மக ஸந்த்யாகாலவ்யதிரேகேண த்ரயாத்மகாநாம் ராத்ரிவிபாகாநாம் த்ருதீயபாகே ஜநநாதி மரணஸம்பவே பரதிநவ்யவஹ்ருதி: ஶௌசகால: பூர்வபாகத்வயே பூர்வதிநவ்யவஹ்ருதி: ஶௌசகால:' (ஶதக வ்யாக்யா) என்றிருக்கிறது. சுண்டபாளையத்தில் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் ஆசௌசஸங்க்ரஹம் வெளியாகியிருக்கிறது. அவைகளுள் தமிழ் ஆசௌசஸங்க்ரஹத்தில் 'ஸாயம் ஸந்த்யை' என்றும் ப்ராதஸ்ஸந்த்யை என்றும் சொல்லப்பட்ட இரண்டு ஸந்த்யையும் கழித்து மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்ட ராத்ரியின் மூன்றாவது பாகத்தில் ஜநநமோ, மரணமோ, ரஜஸ்ஸோ உண்டானால் மறுதினம் முதற்கொண்டே ஆசௌசம். அதற்கு முன் பாகங்களில் ஆனால் முதல் நாள் துடங்கியே ஆசௌசம்' என்று ஸம்ஸ்க்ருத ஆசௌச ஸங்க்ரஹத்தில் சொன்னபடியே எழுதப்பட்டிருக்கிறது. விரிவுக்கஞ்சி வேறு க்ரந்தங்கள் காண்பிக்கப்படவில்லை.

ஆசௌச சதகத்தில் இந்த ச்லோகத்திற்கு முன்பும் பின்பும் ஜநநார்த்தவமரணங்கள் ஸம்பவித்தால் இவ்வளவுகாலம் ஆசௌசம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பகலில் ஸம்பவித்தால் என்றோ ராத்ரியில் ஸம்ப

வித்தால் என்றோ விசேஷித்துச் சொல்லப் படவில்லை. இந்த ச்லோகத்தில் ராத்ரியில் அந்தந்த அம்சத்தில் ஜநநாதிகள் ஸம்பவித் தால் இன்னன்ன காலம்முதல் ஆசௌசம் என்று சொல்லப்படுகிறது ஆகையால் இது விசேஷவிதியாகும். இந்த வசனம் பக்ஷிண் யாசௌசத்தில் ப்ரவ்ருத்தியாதென்றும் திரா சௌசவ்யவஸ்தாபகமென்றும் கீழ்க்கண்ட க்ரந்தங்களில் சொல்லப்படவில்லை. காலத்ரய ரூபபக்ஷிணியானது ஒன்றரை நாளென்று ஆசௌசக்ரந்தங்களில் சொல்லப்படுவதால் பக்ஷிண்யாசௌசமும் திராசௌசமாவதால் பக்ஷிண்யாசௌசத்திற்கும் இந்த வசநம் வ்ய வஸ்தாபகமாகும். ஆகையால் பக்ஷிண்யா சௌசத்தை இவ்விடத்தில்விலக்குவதற்கில்லை. பக்ஷிணி காலத்ரயரூபையாக இருக்கிறபடி யால் பக்ஷிண்யாசௌசவிஷயத்தில் இவ்வசநம் ப்ரவ்ருத்தியாதென்பது சேராது. அப்படிச் சொன்னால் தசாஹம், த்ரிதினம், எகதினம் முதலியது முறையே 20-காலங்கள், 6-காலங் கள் 2-காலங்கள் முதலியதாயிருப்பதால் தசாஹாத்யாசௌசவிஷயத்திலும் ப்ரவ்ருத்தி யில்லை என்றுசொன்னதாகும். அப்பொழுது இவ்வசனத்திற்கு விஷயமில்லாதுபோய்விடும்.

நிஶித்தம் விஜ்ஞேயா நாடீ: வஸாஷ்டம் கடாபிக்ருத: । காலஸ்யாநவதோநாத்யம் யஸ் தஸ்யாசௌசவிதீயதே ॥ என்கிற ஆசௌச சப்தார்த்தத்தை தெரிவிக்கிற ச்லோகத்திலி ருக்கிற காலபதத்திற்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்யா னத்தில் காலஶப்தேந பக்ஷிண்யாஹஸ்த்ர்யஹ

த்யாஹாத்ய உச்யதே' என்றும் தமிழ் வ்யாக் யானத்தில் காலம் என்றது ஒரு போது, ஒரு நாள், ஒன்றரை நாள், மூன்று நாள், பத்து நாள் முதலியது என்றும் விவரணமிருக்கிறது. இவ்விடத்தில் பக்ஷிணியோடு ஸமமாக தசா ஹாதிகளும் காலசப்தத்தால் குறிக்கப்பட்டி ருப்பதை கவனிக்கவேண்டும். இவ்வசனம் ராத்ரியில் ஜந்மம் முதலியது ஸம்பவிக்கும் போது ஆசௌசவ்யவஸ்தாபகம். பகலில் வ்யவஸ்தையில்லாததால் ஸாயம் ஒருநாழி போதுக்கு பக்ஷிண்யாசௌசநிமித்தமான மா ணம் நேர்ந்தால் அஹஸ் சேஷேண ஒருகாலம் கடந்துபோகலாம். ராத்ரி 4-மணிக்கு பக்ஷிண் யாசௌசநிமித்தமான மாணம் நேர்ந்தால் மறுநாள் சூர்யோதயம்முதல் 3-காலங்கள் தீட்டு கார்த்து ஸ்நாநம் செய்யவேண்டும் என்று முன் நிரூபித்ததில் விரோதம் தோன் றவில்லை. அஸபிண்டசவத்துக்கு ஒருவன் அலங்காரத்தையோ, வஹநத்தையோ, தஹ நத்தையோ செய்தால் பாக்கியான பகலி லோ ராத்ரியிலோ க்ராமத்திற்கு வெளியில் வஸித்து சுத்தனாகிறான் என்றர்த்தமுள்ள யஃ ஹ்ருதம் ஶவம் க்ருத்வா அஹோ ராத்ரேண ஶுத்யதி । ஸ ஸூர்யோதயாத் கிராமாத் பஹிர்வஸேத் ॥ என்கிற ச்லோகத்தை சதக வ்யாக்யானம் ஆசௌசகாண்டம் இவைகளில் வ்யாக்யானம் செய்யும்போது சூர்யோதயம் முதல் நக்ஷத்ரோதயம்வரை ஒரு பகல், நக்ஷத் ரோதயம்முதல் சூர்யோதயம்வரை ஒரு இரவு என்று சொல்லியிருப்பது இங்கு நிரூபித்த விஷயத்திற்கு ப்ரதிகூலமல்ல. இப்படி சில வித்வான்களுக்கும் அபிப்ராயம் இருக்கிறது.

ஸ்ரீ:

நல்லோர் ஸந்திப்பு

ஸுமித்ரன்:— ஸுகுணா! உன்னை வெகு நாட்களாக ஸந்திக்க எண்ணினேன். குடும்பக்கவலையினால் உன்னைப் பார்க்கமுடியவில்லை.

ஸுகுணன்:— நானும் உன்னைப் பார்க்க வேண்டும் என்று இரண்டுமாதமாக எண்ணிக் கொண்டே இருக்கின்றேன். உன்னைப்போன்ற நற்குண நற்செய்கைகளையுடையவர்களுக்குமா குடும்பக்கவலை. நான் சொன்னால் நாஸ்திக வாதம், அரசியல் ப்ரஸங்கங்களைக் கேட்பதின் தோஷம் என்றெல்லாம் சொல்லுகின்றாய். இனியாவது நான் சொல்வதை நன்கு அறிவாயா? தைவத்தை தூஷித்தும், ப்ராசீன ஆசாரங்களைப் பழித்தும் அனாசாரங்களை ஆதரித்தும்வரும் அத்தனைபேர்களும் ஒருவிதமான கவலையின்றி இருக்கின்றார்கள். அவர்களுக்கே மனஸ்ஸந்துஷ்டியும் சரீராரோக்யமும் அர்த்த ஸௌக்யமும் இருக்கின்றன. நீ ஸுமதியாகையால் நான் சொல்வதைப் பராமர்சித்துப் பார்.

ஸுமித்ரன்:— மித்ரா! என்னுடைய கஷ்டத்தைக்கேட்டு இவ்வளவு சொல்லிவிட்டாய். அதற்கு **'मत्पापमेवात्र निमित्तमासीत्'** என்னுடைய பாபம்தான் காரணமாச்சுது. என்னைப் போன்றவர்கள் ஏன் கஷ்டப்படுகின்றார்கள் என்றால், **'कलौ कार्तयुगं धर्मं यो नरः कर्तुमिच्छति । स्वामिद्रोहीति तं मत्वा नितरां बाधते कलिः ॥'** என்கிறபடி கலியுகத்தில் ஒருவன் க்ருதயுகதர்மத்தை அனுஷ்டித்தானேயாகில் அவனைக் கலிபுருஷன், 'எஜமானனாகிய நமக்கு இவன் த்ரோஹம் செய்கின்றானாகையால் இவனைச் சிக்ஷிக்கவேண்டும்' என்று எண்ணி மிகவும் கஷ்டப்படுத்துகின்றான்.

ஸுகுணன்:— போதும். நான் சொன்னதை அப்படியே ஒப்புக்கொண்டுவிட்டாய். அதை ஒப்புக்கொண்டதாக ஸ்பஷ்டமாகச் சொல்லவில்லை. அவ்வளவுதானே.

ஸுமித்ரன்:— நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள் துன்பப்படுவதற்கான காரணங்களைச் சொன்னேன். நல்லோர்கள் பூர்வஜந்மத்தில் செய்த வினைப்பயனை அனுபவிக்கின்றார்கள். நன்னடத்தை இல்லாதவர்களும் பூர்வஜந்மத்தில் செய்த புண்ணிய வசத்தால் ஸுகித்து வாழ்கின்றார்கள். அத்யுத்கடமான புண்யத்தையோ பாபத்தையோ செய்தால் அதன் பலத்தை உடனே இவ்விடத்திலேயே அனுபவித்துவிடுவார்கள். இதைப் பார்த்துவரும் பக்கத்து ஜனங்கள் அவரவர் புண்யபாபங்களைப் பேசிப் போவார்கள்.

ஸுகுணன்:— நீ சொல்லுவது ஸரிதான். ஆகிலும் மிகவும் உத்கடமான பாபம் செய்தவன் அனுபவிப்பதைப்போல் இந்த ஜந்மத்தில் நல்லவனாக இருப்பவன் ஒருவன் மிகவும் கஷ்டத்தை அனுபவிப்பானேயாகில் அதைப் பார்க்கும் ஆப்தர்கள் (என்னைப் போன்றவர்கள்) என்ன தெய்வம் வேண்டியிருக்கின்றது. எப்பொழுதும் எதற்கும் பயப்பட்டாயே என்பார்கள். அவனையறியாதவர்கள் மஹாபாபி கஷ்டத்தையனுபவிக்கின்றான் என்பார்கள். ஆக இருவருக்கும் வித்யாஸமென்ன?

ஸுமித்ரன்:— ஆம் வித்யாஸமில்லைத்தான். இருவரும் மஹத்தான கஷ்டத்தைத்தான் அனுபவிக்கின்றார்கள். **'दुःखे जातुचिदागते स्वकलिताद्दुष्कर्मणः पक्तिमात् नाथे हन्त निरागसि व्यसनिभिर्नैर्घृण्यमारोप्यते'** என்கிறபடி தான்செய்த பாபத்தின் பயனாக கஷ்டத்தை அநுபவித்தால் அதையறியாமல் ரக்ஷகனான பகவான் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டான் என்று துக்கப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள். இது ந்யாயமா? அத்யுத்கடமான பாபத்தைச் செய்தவன் இந்த லோகத்தில் கஷ்டப்படுவதுடன் இறந்தபிறகும் நரகாதிகளை அனுபவிக்கின்றான். நல்லவர்களாய், நன்னடத்தையுடனும், பகவத்பக்தியுடனுமிருப்பவர்கள் கஷ்டப்பட்டார்களாகில் அது நன்மைக்கேயாகின்றது. இவனிடத்தில் பகவான் அனுக்ரஹம் செய்ய **'यस्यानुग्रहमिच्छामि धनं तस्य हराम्यहम् । बान्धवैश्च वियोगेन सदा भवति दुःखितः ॥ तेन दुःखेन संतप्तो यदि मां न परित्यजेत् । तं प्रसादं करिष्यामि ... ...'** என்கிறபடி அவர்களை தரித்ரர்களாக்கியும் பந்துக்களை இழக்கும்படிச்செய்து

அதனால் எப்பொழுதும் கஷ்டப்படும்படியும் செய்கிறான். அப்படியும் 'நம் வினைப்பயன் இது. அந்தோ அன்று நாம் சிரிக்கச் சிரிக்க ஸந்தோஷமாய் செய்ததை இன்று அழுது கொண்டே அனுபவிக்கின்றோம்' என்றெண்ணி பகவானையே நம்பியிருக்குமவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கின்றது. இந்த லோகத்தில் ஸுகத்தையே அனுபவித்துவந்தானேயாகில் மோக்ஷத்தில் கடுகத்வரை உண்டாகாதென்றெண்ணியே சில கடின ப்ரக்ருதிகளுக்குச் செய்யும் சிக்ஷையை இவனுக்குக் கொடுத்தால் அந்த கஷ்டத்தால் 'கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ' என்று வாய்புலற்றி பகவத்பக்தி மேலிட்டு மோக்ஷம் சீக்கிரத்தில் கிட்டவேணும் என்கிற ஆசையுண்டாகின்றது. ஆகையால் பகவானுடைய அனுக்ரஹகார்யமாகவே அதைக் கொள்ளவேண்டும். இதுதான் இருவர்களுக்குள்ள வித்யாஸம்.

ஸுகுணன்:— ஸுமித்ர! நீ சாஸ்திரம்படித்திருக்கின்றாய். அதில் உனக்குப் பூர்ண நம்பிக்கையும் இருக்கின்றது. நீ நல்ல புத்திமானாகவும் இருக்கின்றாய். ஆகையால் ப்ரமாணங்களைக் காட்டி ஸரியான ஸமாதானமும் சொன்னாய். மிக்க ஸந்தோஷம். இவ்விஷயம் என் மனத்தில் நன்றாகப் பதிந்தது. நீ அடிக்கடி 'அரசியல் பேச்சுக்களைக் கேட்பதால் கெட்டுப் போகின்றாய். அவைகளையே உண்மையாக எண்ணுகின்றாய்' என்று சொல்லுகின்றாய். நீ அவைகளைக் கேட்காததால் அவ்விதம் பேசுகின்றாய். உண்மையில் அவர்கள் பிறர்களுக்காகவே உழைக்கின்றார்கள், அஹிம்ஸையே முக்யம் என்கிறார்கள். தன்னலம் கருதாமல் அல்லும் பகலும் உழைக்கின்றனர், அவர்களை ஜனங்கள் புகழ்கின்றனர். அவர்கள் சொல்லுவது எல்லாம் நன்மையாகவே இருக்கின்றது.

ஸுமித்ரன்:— ஸுகுணா! நீ நல்ல குணமுள்ளவனாகையால் உனக்குஇப்பெயர்உண்டாயிற்று. ஆகையால்விருப்வெறுப்பின்றி ஹம்ஸம்போல் ஸாரமானத்தையே க்ரஹிப்பாய் என்று எண்ணியே லௌகிகாசாரங்களில் மோஹத்தை உடையவனாகிலும் உன்னிடம் மேலும் பேசத் துணிகின்றேன். உன் மனத்திலுள்ளதை ஸாவதானமாகக்கேள்.

ஸுகுணன்:— மிக்க ஸந்தோஷம். நீ நல்ல பொருமை உள்ளவனாகையால் உன்னிடம் விஷயங்களைத்தெரிந்துகொள்ளவே இவைகளை ப்ரஸ்தாபிக்கின்றேன். மற்றவர்களிடம் இவைகளைச் சொன்னால், 'துஷ்டன் கெட்டுப்போய் விட்டான், இனி இவன் மூஞ்சியில் விழிக்கக் கூடாது' என்று சொல்லித துரத்திவிடுவார்கள். ஆகையால் உன்னிடம் என் மனத்திலுள்ளதைக் கேட்கின்றேன். நம்மவர்கள் பிறருக்காகஎன்னசெய்கின்றார்கள்? தாங்களுண்டு தங்கள் அனுஷ்டானமுண்டு என்றல்லவோ கிடக்கின்றார்கள்.

ஸுமித்ரன்:— உண்மையை உணராமல் உரைக்கிறாய். இவர்களும் எவ்வணவோ செய்கின்றார்கள்.

ஸுகுணன்:— நான் அரசியல்வாதிகள் உழைக்கிறார்களேனின்நீயும்நம்மவர்கள்உழைக்கிறார்களென்று சொல்லிவிட்டால் போதுமா?

ஸுமித்ரன்:— அவர்கள் என்ன செய்கின்றார்கள்?

ஸுகுணன்:— ஆங்காங்கு சென்று ப்ரசாரம் செய்கின்றார்கள். அதனால் ஜனங்கள் மனம் மாறுகின்றது. நல்லவர்களாகின்றார்கள்.

ஸுமித்ரன்:— நம் பெரியோர்களும் உபாதாநகாலத்திலும் ஸ்வாத்யாயகாலத்திலும் நம்போன்ற சிறுவர்களை வரவழைத்து நல்லுபதேசம் செய்கின்றார்கள்.

ஸுகுணன்:—பார்த்தாயா? எவ்வளவு குறுகிய மனப்பான்மை! நம்மைப்போன்றவர்களுக்குச் சொன்னால் போதுமா?

ஸுமித்ரன்:— உபந்யாஸங்களைப் பண்ணி அதில் நாம் எப்படி நடக்கவேண்டும்? புராண புருஷர்கள் எப்படி நடந்திருக்கின்றார்கள்? நல்லோர்களுக்கு நேர்ந்த நன்மைகள் தானென்ன? தீயார்களுக்கு நேர்ந்ததீங்கு என்ன என்பவைகளை நன்றாக மனத்தில் படும்படி எடுத்து உதாஹரணத்துடன் சொல்லவில்லையா?

ஸுகுணன்:— இவர்கள் உபந்யாஸம் செய்கிறார்கள் என்பது உண்மையே. ஆகிலும் பணத்திற்காக பண்ணுகின்றார்களே என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது.

ஸுமித்ரன்:— அதில்மட்டில் என்ன? பெரியதோர் ஸ்தாபனத்தை எற்படுத்தி அதன்

மூலம் மேடைப் பேச்சாளர்களுக்குக் கொடுக்கின்றார்கள். அவர்களின் கணக்குகளைப் பார்த்தாயாகில் தெரியவரும். 6-மாதங்களுக்கு ஒருகடவை படிச்செலவு என்று ஆயிரக்கணக்கில் செலவு செய்தது தினசரிப் பத்திரிகையில் வருவதாகச் சொல்லுகிறார்களே நீ பார்த்ததில்லையா?

ஸுகுணன்:— ஆங்காங்கு சென்று ஜனங்களுக்குநல்லபடி இருக்கச்சொல்வதற்கு அவர்கள் என்ன கோடீச்வரர்களா? அப்படியாகிலும் ஒரு தினமா? இரண்டு தினமா?

ஸுமித்ரன்:— மித்ரா! போதும் உன்னையே மறந்து சொல்லுகின்றாய். அன்றாடம் திருவாராதனத்திற்குப் போதும் போதாததுமாக உள்ளப் பெரியோர்கள் எப்படித் தங்கள் ரூபாயைச் செலவழித்துக்கொண்டு ஆங்காங்கு சென்று உபதேசிக்கமுடியும். அவர்களது என்றிருந்தால்தானே போகமுடியும். மேலும் உபந்யாஸமுடிவில் கொடுப்பதை ஸந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு போகின்றார்கள். சில ஸமயம் போக்குவரத்திற்குண்டான செலவுக்குக்கூட போதாமல் இருக்கும். அவர்கள் அப்படியில்லை. சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு போக்குவரத்திற்கும் கணக்குப்படி வாங்குகின்றார்களே.

ஸுகுணன்:— உண்மைதான். ஆகிலும் இவர்கள் பேசுமிடத்தில் மிதமாகத்தானே கூட்டமிருக்கின்றது. அவர்கள் பேசுமிடத்தில் ஜனங்களின் நெரிசலை சொல்லமுடியாமலிருக்கின்றதே.

ஸுமித்ரன்:— ஆம், வாஸ்தவந்தான். காலத்தின் கோலம். 'गतानुगतिको लोकः न लोकः परमार्थिकः' என்கிறபடி ஒருவனைப் பின்பற்றி மற்றொருவன் சொல்லுகின்றான். உண்மையை உணர்கின்றானில்லை. மேலும் நேரில் ஜனங்களுக்குத் தெரிந்தவைகளையே பொய்யும் மெய்யும் கலந்து பாஷிக்கின்றான். ஒரே வார்த்தை. பாஷிக்குமிடத்தில் கூட்டம் கூடிவிடும். நம் உபந்யாஸகர்களே பொதுவாக பாஷிக்க ஆரம்பித்தால் அங்கும் நிறையக் கூட்டம்கூடிவிடும். ஏன், தினசரி பத்ரிகைகளிலும் இந்த வித்யாஸத்தைப் பார்க்கலாம். நல்லதோர் ஸம்ப்ரதாயப்பத்ரிகைகளிலும் அயலாரை பாஷித்து வந்தால் கூட்டம் கூடி படிக்கின்றார்கள். அவர்களே ஏதாவது ஒருஸமயம் நல்லது எழுதிவிட்டால் அதைநாலெட்டுபேர்கள்கூட படிப்பதில்லை. இதை நீ தினமும் பார்க்கவில்லையா? கூட்டங்கூடுவது ஒரு காரணமாகுமா? மேலும் இவைபோன்றவைகளில் நன்கு படித்தவர்கள் கலந்துகொள்கின்றார்களா?

ஸுகுணன்:— நீ சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆகிலும் அவர்கள் உழைக்கின்றார்கள்.

ஸுமித்ரன்;— அவர்கள் உழைக்கின்றார்கள் என்றால் மண்வெட்டிகொண்டு மண்ணை வெட்டுபவர்கள் ஒருவருமில்லை. ஒரு கூடை மண் சுமந்தவர்களுமில்லை. எல்லாம் வெறும் பேச்சோடு ஸரி.

ஸுகுணன்:— எல்லோருக்கும்உண்ணஉணவு வேண்டும் என்று எவ்வளவோ பாடுபடுகின்றார்கள். நாம் நம் கார்யத்தைமட்டும்பார்த்துக்கொண்டு போகின்றோம்.

ஸுமித்ரன்:— இவர்களிடம் அதிகாரமிருக்கின்றது. பணம் இருக்கின்றது. அவைகளைக்கொண்டு நீர்த்தேக்கங்கள் கட்டுகின்றார்கள். இவைகள்தானே. நம்மிடமிருந்தால் நாமும் இதைச் செய்யத் தயங்கமாட்டோம். இவைகள்நம்மிடமில்லாததால் நாம் பேசாமல் இருந்துவிடவில்லை. தேக்கங்கள் கட்டினாலும் அவைகளில் ஜலம் வேண்டுமல்லவா? அதற்காக நாம் பகவானை அநுதினமும் ஒவ்வொருவனும் 'कावेरी वर्धतां काले' 'काले वर्षतु पर्जन्यः' [காவேரி நதியில் காலத்தில் ப்ரவாஹம் வரவேண்டும், அதற்கு அநுகுணமாக ஸரியான காலத்தில் மழை பொழியவேண்டும்] என்றல்லவோ ப்ரார்த்திக்கின்றான். மேலும் வேதம் ஓதும் வேதியர்க்கு ஓர் மழை பெய்கின்றது. இவ்விதம் ஸமஸ்தஜனங்களும் ஸுகித்திருக்க எண்ணுகின்றார்கள். மேலும் 'गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यम्' என்று கால்நடைகளின் க்ஷேமத்தையும் ப்ரார்த்திக்கின்றார்கள்.

ஸுகுணன்:— இக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் பகல்வேளையில் பிள்ளைகளுக்கு போஜனம் போடவேண்டும் என்று ப்ரயத்னப்படுகின்றார்கள். அது பெரியதோர் நல்ல கார்யமல்லவா?

ஸுமித்ரன்:— ஆம்! நல்ல கார்யம்தான். ஆகிலும் பெரியோர்கள் அநுஷ்டித்த சிறந்ததோர் முறையே இது. நம் பெரியோர்கள்

தங்கள் பிள்ளைகட்கு 8-வது வயதில் பூணூல் போட்டு குருவின் ஸமீபத்தில் கொண்டு விட்டுவிடுவார்கள். உபநயநம் என்றால் ஆசார்யன் ஸகாசத்தில் கொண்டுவிடுவது என்று பொருள். அங்கு அவன் ஸகல வித்யைகளையும் கற்றறிவான். அப்பொழுது பிக்ஷை எடுத்து ஸாப்பிடுவான். அவர்களுக்கு க்ருஹஸ்தர்களாக இருப்பவர்கள் பிக்ஷைபோட வேண்டும் என சாஸ்த்ரம் கூறுகின்றது. இவ்விதமே முன்காலத்தில் எல்லோரும் படித்து பண்டிதர்களாயும், அமாத்யர்களாயும் கோசாதிகாரிகளாயும், ராஜ்யாதிகாரிகளாயும் இருந்திருக்கின்றார்கள். மேலும் வேதாத்யயனத்திற்கும் ஶாஸ்த்ராத்யயனத்திற்கும் ஸௌகர்யமாக அநேக பாடசாலைகள் ஆஹாரஸௌகர்யத்துடன் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த முறையையே புதியரூபத்தில் புதிதாகக் கொண்டு வருகின்றார்கள். முந்திய முறை அறியாதவர்கள் இதில் ஆச்சர்யப்பட்டு நம்மவர்களை தூஷிக்கத்தொடங்குகின்றார்கள். அந்தோ! என்ன அனியாயம். வேதம் என்ன கூறுகின்றது தெரியுமா? **न कञ्चन वसतौ प्रत्याचक्षीत। तद्व्रतम्। तस्माद्ययाकया च विधया बह्वन्नं प्राप्नुयात्। अराध्यस्मा अन्नमित्याचक्षते ।'** ராத்ரி வேளையில் ஒருவருக்கும் ஸாதம் இல்லை என்று சொல்லாதே. இதுதான் வ்ரதம். இதற்கு தனிகராக இருந்தால்தானே முடியும் என்றால், எவ்விதத்திலாவது நிறைய ஆஹாரத்தை ஸம்பாதித்துக்கொள். சத்ருக்கள் ராத்ரிவேளையில் ஆஹாரம் கேட்டாலும் போடவேண்டும் என்று போதிக்கின்றது. ஸநாதனதர்மத்தின் உண்மையை உணர்வாயா? மேலும் கேள். நம் பெரியோர்கள் சாப்பிட்டு முடிந்ததும் உத்ராபோசனம் பண்ணியானதும் மீதி ஜலத்தை இலையின் பக்கத்தில் விடுகின்றார்கள். அப்பொழுது **'रौरवेऽपुण्यनिलये... ... ... अर्थिनामुदकं दत्तम्** ... ... என்கிற மந்திரத்தைச் சொல்லி விடுகின்றார்கள். இதன் பொருளாவது—'ரௌரவாதி நரகங்களில் அந்நபாநமில்லாமல் கஷ்டப்படுகின்றவர்களுக்கு இந்த ஜலத்தை விடுகின்றேன். இது அக்ஷய்யமாக இருக்கட்டும்' என்று. வஸ்த்ரநிஷ்பீடனம் பண்ணும்போது தினமும் சொல்லும் மந்த்ரத்தில் 'எங்கள் குலத்தில் பிள்ளை இல்லாமலிருந்தவர்களுக்கு இந்த வஸ்த்ரோதகத்தை விடுகிறேன்' என்கிறார்கள். தர்ப்பணாதிகளில் கடைசியில் **'येषां न पिता (सुतः) न भ्राता... ... ...** என்னும் மந்த்ரத்தைச் சொல்லி திலோதகத்தை விடுகின்றார்கள். 'எவர்களுக்கு பிள்ளையோ, ப்ராதாவோ இதர பந்துக்களோ இல்லையோ அவர்களுக்கு எள்ளுடன்கூட குசோதகத்தை விடுகின்றேன்' என்று விடுகின்றான். ச்ராத்தாதிகளில்— **ये अग्नि दग्धाः'** என்கிற மந்திரத்தில் எவர்கள் குலத்தில்நெருப்பினால் தக்தர்களோ, எவர்கள் அநக்நியால் தக்தர்களோ அவர்கள் பூமியில் வைக்கப்பட்ட இந்த பிண்டத்தால் த்ருப்தியையடையட்டுமென்று பூமியில் பிண்டப்ரதானம் பண்ணுகிறார்கள். இவைகளை நன்றாக கவனித்து கேட்டுவருகின்றாயா? ஸநாதனிகளின் தயையையும், விசாலமான மனோபாவத்தையும் தெரிந்துகொண்டாயா? ஆகையாலேயே கல்பகோடிகாலமாகியும் நம் ஸநாதனமதம் அழியாமல் தழைத்து ஶாகோபஶாகமாக வ்ருத்தியடைகின்றது. ராமன் காலத்தில் ஜாபாலியும் க்ருஷ்ணன் காலத்தில் சிசுபாலாதிகளும் நாஸ்திகவாதம் பண்ணியும் பகவானை தூஷித்தும் வந்திருக்கின்றார்கள் அதற்குப்பிறகும் இன்றுவரையில் ஸநாதனமதம் அழியவில்லை. ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீதேசிகன் போன்றவர்கள் அவ்வப்போது அவதரித்து பயிரிலுள்ள களையை களைந்து வேலி போட்டுவைக்கின்றார்கள். நான் கீழே குறிப்பிட்டவைகளை நம் பெரியோர்கள் டம்பார்த்தம் செய்தார்களென்றோ, க்யாத்யர்த்தம் செய்தார்களென்றோ, பணத்திற்காக செய்தார்களென்றோ சொல்ல முடியுமா? இவர்கள் செய்துவரும் கார்யம் ப்ராஹ்மணனாகப் பிறந்த உனக்குத் தெரியுமா? ஆகையால் பிறருக்குத் தெரியாமல் ஆத்மார்த்தமாகச் செய்யும் செய்கையன்றோ இது.

ஸுகுணன்:— ஸுமித்ர! ஸத்ஸங்கத்தின்மேன்மையை இன்று நன்குணர்ந்தேன். நாழிகையாகிவிட்டபடியால் பிறகு ஸந்திப்போம்.

[library stamp] 5/7/3/

ஸ்ரீ:

கண்ணனும் கீதையும்

பகவதவதாரங்கள் பலவற்றில் ஸ்ரீக்ருஷ்ணாவதாரமொன்றுமே மேன்மையில் நீர்மை விஞ்சித தனிச்சிறப்புற்றதென்பது ஸுப்ரஸித்தமானது. 'கோபாலதாபநீயம்' என்னும் உபநிஷத்திலும் பாராசர பாராசர்ய சுகாதிமஹர்ஷிகளின் இதிஹாஸ புராணங்களிலும் கண்ணனுடைய அவதாரச் சிறப்பும் திவ்யசேஷ்டிதங்களிலும் பரக்கக் காண்கிறோம். சிறையிலே பிறந்து சேரியிலே வளர்ந்து மறைந்து நின்ற இவ்விறையவன்படிகளை நினைந்து 'பிறந்தவாறும் வளர்ந்தவாறும்' என்கிற திருவாய்மொழியிலே மாறன் மனமுருகின்றமை தெளிவாகின்றது. தேவனுகச்செய்தே வாசுதேவனும் தேவகிபெற்ற பேதைக்குழவியுமாய், நந்தன் மதலை யசோதை யிளஞ் சிங்கமுமாய் இப்படி ஒருத்திமகனுய் பிறந்தோரிரவி லொருத்திமகனுயொளித்து வளர்ந்ததும், நாதனுன நிலையில் பாண்டவர்க்குச் சூதனும் தூதனுமாயமைந்தமையும் இவ்வவதாரத்தின் தனிச்சிறப்பு.

க்ருஷ்ணவதாரமென்றால் ஆழ்வார்களெல்லோரும் ஒக்கப்பரிவராயிருப்பர்கள். இதற்குக் காரணம் — பிறந்தவிடம் சத்ருக்ருஹம், இடம் பார்த்து நலியும் துஷ்ப்ரக்ருதிகளைத் துணைகொண்ட கம்ஸன் க்ரூரசத்ரு, தமப்பனிடையன், ஊர் இடைச்சேரி, சண்ணனே காளியன் வாயிலே புகும் தீம்பன், காலம் கலிகாலத்தோடு தோள் தீண்டியானது. என் வருகிறதோ என்று ஆழ்வார்கள் அனைவரும் இவ்வவதாரத்திலே பரிவராவர். ஏணி பல்லாண்டு முதற்பாட்டு நானூற்றெழுபத்தொன்றிரண்டிலுமிவ்வவதாரத்திலே பெரும்பாலும் ஈடுபட்டார் பட்டர்பிரான். இவர் முதலில் பல்லாண்டு தொடங்கியது 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனு'க்கே. 'படைபோர் புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே' என்றதுவும் கண்ணனுடைய திருச்சங்கிற்கே பல்லாண்டாகிறது, **'स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्'** என்றபடி பாரதமாப்பெரும்போர் தொடக்கத்தில் கண்ணன் கையில் முழங்கிய சார்ங்கமென்னும் சங்கத்தையிங்கு வாழ்த்துகிறார்.

திருவாழிக்குப்பல்லாண்டு பாடுமிடத்திலும் 'மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதிபாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப்பல்லாண்டு கூறுதுமே' என்று இவ்வாழிவல்லானுக்கே வாழிகூறுவர். 'செங்கள்தோற்றித் திருமதுரையுட்சிலைகுனித்து, ஐந்தலைய பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே யுன்னைப் பல்லாண்டு கூறுதுமே' என்று மேலும் வாழ்த்துவர். இப்படி க்ருஷ்ணவதாரத்திலே பல்லாண்டு பாடத்தொடங்கியவர் மேலே திருமொழிகளில் அவதாரச்சிறப்பு, திருமேனியழகு, திருத்தாலாட்டு, அம்புலிப்பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப்பருவம், தளர்நடைப்பருவம், அச்சோபருவம், புறம்புல்கல், பூச்சிகாட்டுதல், முலையுண்ணல், காதுகுத்தல், நீராட்டம் என்றுப்போல் பாலக்ரீடை யனைத்தும் ஒன்றும் சோராமே யநுபவித்து இறுதியில் இவ்வாறு தலைக்கட்டினார்:—

வேயர்தங்கள் குலத்துதித்த
　　விட்டுசித்தன் மனத்தே,
கோயில்கோண்ட கோவலனைக்
　　கொழுங்குளிர் முகில்வண்ணனை,
ஆயரேற்றையமரர்கோவை
　　அந்தணர்தமமுதத்தினை!
சாயைபோலப் பாடவல்லார்
　　தாமுமணுக்கர்களே' என்று.

இவ்வாறாகவே சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திவ்யாநுபவமனைத்தும் கண்ணனைப் பற்றியதே. ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் இடைப்பெண்களாகவும், தானும் அவர்களிலே யொருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளுநிற்கிறவன் க்ருஷ்ணனுகவும் அநுஸந்தித்து அவ்வநுகாரமே மார்கழித்திங்கள் பாட்டுக்களனைத்துமன்றோ!

'नीळातुङ्गस्तनगिरितटीसुप्तमुद्बोध्य कृष्णं ……
………' என்பதாக திருப்பாவை முப்பது பாட்டுக்களும் கண்ணனைப் பற்றியவை யென்று ஸ்ரீபராசரபட்டரருளிய தனியனும் விளக்கு

கின்றது. தையொருதிங்கள் பாமாலை நூற்று நாற்பத்தி மூன்றும் அதை யடியொற்றியவையே. 'ஆயர்குலவேந்தனுகந்தாள்' என்று இவள் திருமொழித் தனியன். கண்ணனை யிணக்கவேணுமென்று காமனைத்தொழுதலும், சிற்றில் சிதையேல் என்னலும், கன்னியரோடு கண்ணன் விளையாடுதலும், கூடல் குறிப்பும், குயில் கூவுதல், கனவு என்றாப்போல் கண்ணனநுபவமாகவே யமைந்து இறுதியில்

'பருந்தாள்களிற்றுக்கருள்செய்த
பரமன்தன்னை, பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை
விட்டுசித்தன் கோதைசொல்'

என்றுகண்ணனைக்கண்டமையில்நிகமனப்பெறுவதால் நாச்சியார் திருமொழி யனைத்தும் கண்ணனைப்பற்றிய வநுபவமேயாகின்றது. ஆனதுபற்றியே ஸ்வாமி ஸ்ரீதேசிகனும் '**कृष्णान्वयेन दधतीं यमुनाऽनुभावं तीर्थैर्यथावदवगाह्य सरस्वतीं ते**' என்று நாச்சியார் திவ்யஸூக்தி யனைத்தும் ஸ்ரீக்ருஷ்ணனையே விஷயமாகக் கொண்டதென்று அருளிச்செய்தார். இவ்வாறாக மற்றையாழ்வார்களின் விலக்ஷணாநுபவங்களைப் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். மாறனையன்றித் தேவுமற்றறியேனென நின்ற மதுரகவியாரும் 'கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன் என்னப்பன்' என்பதாக இவ்வவதார திவ்யசேஷ்டிதங்களில் ஈடுபட்டிருப்பரென்றால் மற்றையாழ்வார்களுக்குக் கேட்கவேணுமோ? மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரத்திலும் கோவலனாய் வெண்ணெயுண்டவாயனாகிய அணியரங்கனையே பாடினமையால் கண்ணனே மாறன் மறைப் பொருளாகும். 'பரகாலன் சொல் அத்தனாயர் வேங்கடமாற்காயிரத்தோடான விருநாற்றோரைம்பற்றுமூன்றும்' 'கண்ணனடியிணையெமக்குக் காட்டும் வெற்பனைப்' பற்றியதாயிற்று. இது ஆழ்வார்களின் நிலை.

நாதமுனிகள் முதலான நம் பூர்வாசார்யர் பெரும்பாலும் கண்ணனையே குலதனமாகக் கொண்டு ஆராதித்து வந்தவர்கள். 'ஆயர் தேவு நஞ்சீயர் திருவாராதனம். எங்களாழ்வார் பக்கலிலே சென்று ஆயர் தேவு நாவற்பழம் வேண்ட 'நீயார்' என்று எங்களாழ்வார் கேட்டதற்கு 'ஜீயர் மகனான ஆயர்தேவு' என்றாராம். ஜீயரைக்கண்டு 'உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்கவொட்டுகிறிலன்' என்றாராம் எங்களாழ்வார். 'தமருகந்ததெவ்வுருவம்' என்கிற பாட்டின் வியாக்யானத்திலே ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை உதாஹரித்துள்ள ஐதிஹ்யமிது. 'பெரியதிருமலைநம்பி, தம்முடைய அந்திமதசையிலே, தமக்கொரு வெண்ணெய்க்காடும் பிள்ளையாயிற்றுத் திருவாராதனம், அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச்சொல்லி 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே' என்றாராம். ஈட்டில் காட்டிய வைதிஹ்யமிது. இப்படி இன்னும் பற்பலவுள.

கீதோபதேசம் செய்தது இவ்வவதாரத்தின் தனிச்சிறப்பு. இதற்கென்றே இவ்வவதாரம் என்பதாக ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் தயாசதகத்திலே அருளுகிறார்:—

'प्रभूतविबुधद्विषद्भरणखिन्नविश्वम्भरा
भरापनयनच्छलात्त्वमवतार्य लक्ष्मीधरम् ।
निराकृतवती दये निगमसौधदीपश्रिया
विपश्चिदविगीतया जगति गीतयान्ध्यं तमः'

'பூமிபாரத்தைப் போக்குவதென்னுமோர் வியாஜத்தாலே ஸ்ரீகாந்தனை கண்ணனாக வவதாரம்செய்வித்து வேதார்த்தத்தை விளக்கும் விளக்காகிய கீதையினா லிருளனைத்து மகத்தினாய்' என்று கருணையைத் துதிக்கின்றாரிதில். கீதாவதாரமே ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திற்குப் பலமென்று தேறியது.

'அடற்புள்ளரசிலுமந்தணர்மாட்டிலு
மின்னமுதக்
கடற்பள்ளி தன்னிலுங் காவிரியுள்ள
முகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி யுரைத்ததுரைக்
குமேதிவரனார்
மடப்பள்ளி வந்த மணமெங்கள்
வார்த்தையுள் மன்னியதே'

என்று பரமபதஸோபான ப்ரபந்தம் துடங்குகின்றது. அவதாரங்களில் ஸ்ரீராமக்ருஷ்ணாவதாரங்களுக்குள்ள தனியேற்றம் சேதுபந்தமும் கீதோபதேசமும். ஆசார்ய சம்பு என்

பது ஸ்ரீதேசிக திவ்யவைபவ பரமான ஓர் க்ரந்தம். அதில் ரஸகனமாயுள்ளவிந்த ச்லோகத்தை யனைவரும் நித்யாநுஸந்தானம் செய்க

'आविर्भावेषु ते श्रीमन्नञ्जनाद्रिनिकेतन ।
मन्ये विशिष्य मान्यौ द्वौ सेतुगीताविधायिनौ ॥'

ஸ்ரீதேசிகன் திருத்தகப்பனாராகிய அனந்த ஸோமயாஜியானவர் திருவேங்கடவன் ஸந்நிதியில் விண்ணப்பம் செய்வதாக க்ரந்தகர்த்தாவினீடுபாடு இந்த ச்லோகம். 'ஸ்ரீகாந்தனே! வேங்கடவெற்பனே! தேவரீர் நிலவரம் பல பல பிறப்பாய் அவதாரம் செய்தருளினீர். அவற்றுள் சேதுவைக் கட்டி கீதையைத் தந்த அவதாரங்கள் இரண்டே தனிச்சிறப்புற்றவை என்று அடியேன் எண்ணுகிறேன்' என்று இதன் கருத்து.

மறைமுடிகளில் மறைந்துகிடக்கும் தத்வஹிதபுருஷார்த்தங்களை வெளிதாகத் தெளிவிக்குமதில் கீதைக்கு நிகர் கீதையே யன்றி வேறில்லை. பரதத்துவமே பரமதத்துவங்களை ஸாக்ஷாத்தாக வுபதேசிப்பதென்றால் இதன் மஹிமைக்கு எல்லையுண்டோ? இதில் கண்ணன் திருவாக்குகளாக அமைந்த ச்லோகங்களறுநூற்றிருபது; அர்ஜுனனுடையது ஐம்பத்தேழு; ஸஞ்ஜயன் சொல்லியது அறுபத்தேழு; த்ருதராஷ்ட்ரனுடையது ஒரு ச்லோகம்; ஆக எழுநூற்றி நாற்பத்தைந்து ச்லோகங்களடங்கியது கீதாசாஸ்த்ரம். ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருமுகமண்டலத்திலிருந்து ச்லோகரூபமாகவே ஆவிர்பாவம் பெற்றது என்பதாக ஸ்ரீமந்நிகமாந்ததேசிகனுடைய ஸூக்திகளால் தெளிவாகின்றது.

गीता सुगीता कर्तव्या किमन्यैश्शास्त्रसंग्रहैः ।
या स्वयं पद्मनाभस्य मुखपद्माद्विनिस्सृता ॥'

'षट् शतानि सविंशानि श्लोकानां प्राह केशवः'

என்பதாகவுள்ள மஹாபாரத வசநங்களினுமிவ்வாறாக நிர்ணயம் செய்யவேண்டியிருக்கின்றது.

ஸ்ரீமந்ந்யாயபரிசுத்தியிலே சப்தாத்யாயத்தில் 'विगीतं वाक्यम सर्वज्ञप्रणीतम्, प्रमाणत्वे सति अलौकिकार्थविषयत्वात् 'न त्वेवाहं जातु नास' मित्यादिवाक्यवत्' என்றும், 'गीतादिषु भगवदुक्तत्वांशानां वेदत्वानभ्युपगमात्' என்றும் இவ்வாறாக கீதையிலுள்ள பகவத்வாக்யரூபங்களான ச்லோகங்கள் யாவும் பகவந்முகோத்கதங்கள் என்பதாக அருளிச்செய்துள்ளார். இதுவே விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தமென்பதை 'ஸ்ரீபகவத்கீதாபந்யாஸதர்பண' மென்னும் பண்டித லக்ஷ்மணாசார்யருடைய வ்யாக்யாநத்திலே ஸவிஸ்தரமாகக் காணலாம். ஆநந்தமுத்ராசாலையில் முத்ரிதமான மதத்ரய கீதாபாஷ்யத்தின் உபோத்காதத்தில், கீதையிலுள்ள ச்லோகங்கள் வ்யாஸ கர்த்ருகங்களே யன்றி பகவான் பத்யரூபமாக அருளியவையன்று என்பதாக ஸவிஸ்தரமாக வோர் விமர்சநமுள்ளது. இந்த விமர்சநமானது மேலே யுதாஹ்ருதங்களான பாரத வசநங்களுக்கும் ந்யாய பரிசுத்தி ஸூக்திகளுக்கும் 'इत्यहं वासुदेवस्य' இத்யாதியாககீதையிலுள்ளநிகமநச்லோகபாஷ்யாதிகளுக்கும் முரண்படுகின்றது. ஆதலால் நமது ஸித்தாந்தத்திலே கீதையிலுள்ள பகவத்வசநங்கள் யாவும் ச்லோகரூபங்களாக ஸாக்ஷாத் பகவந்முகோத்கதங்களே. 'यस्मादनन्तदयांबुधेरुदितजनताशोकश्श्लोकस्स्वयं समजायत' என்பதாக பகவத்கீதையிலுள்ள சரமச்லோகமானது பகவானிடமிருந்து ச்லோகரூபமாகவே ஆவிர்பவித்ததாக சரமச்லோகாதிகாரத்திலே யருளிச்செய்யப்பெற்றது. ஸ்ரீஸாத்வதம் ஜயாக்யம் முதலிய ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் ஸாக்ஷாத்தாக ச்லோகரூபங்களாய் பகவந்முகோத்கதங்களென்பது நிர்விவாதமானவை. அவைபோலவே கீதாசாஸ்த்ரமும், 'व्यासप्रसादात् श्रुतवान् ……… कृष्णात्साक्षात्कथयतस्स्वयम्' என்கிற ச்லோகத்தின் தாத்பர்யசந்த்ரிகையில் இது ஸ்பஷ்டம், 'स्वयमेव कथयतः, न तु परैर्वाचयत इत्यर्थः। तेन वक्तृवैलक्षण्योक्तिः। यथा 'पंचरात्रस्य कृत्स्नस्य वक्ता नारायणस्स्वयम्' इति' என்கிற தாத்பர்ய சந்த்ரிகா ஸூக்தியை இங்கு அநுஸந்திக்கவும், பஞ்சமவேதமான மஹாபாரதத்தில் கீதாசாஸ்த்ரமானது உபநிஷத் என்பதாக 'अत्रोपनिषदं पुण्यां कृष्णद्वैपायनोऽब्रवीत्' என்றுள்ளது, வேதங்களில் புருஷஸூக்தமும், தர்மசாஸ்த்ரங்களில் மநுஸ்ம்ருதியும், புராணங்களில் ஸ்ரீவிஷ்ணுபுராணமும், பாரதத்தில் பகவத்கீதையும் சிறந்தது என்பதாகவும் கொண்டாடப்பெற்றுள்ளது,

(தொடரும்)

ஸ்ரீ:

யாருக்கு நமஸ்காரம்?

இணைபிரியாத நண்பர் இருவர். அவர்களுடைய நட்பும் முறியவேண்டிய தருணம் வந்துற்றது. ஒரு ஸமயம் அவர்கள் தெருவில் கைகோர்த்து நடந்து செல்லும்போது, ஒரு மோஹநாங்கி எதிர்வழிப்பட்டாள். இவர்களைக்கண்டு புன்னகை புரிந்து, கரமெடுத்து வணங்கி,வந்தவழியேமேலும்சென்றுவிட்டாள் ஆனால் அவளைக் கண்டு தனித்தனியே காமம் கொண்ட இருவரும், தங்களுக்குள் பலமாக விவாதம் செய்யத் துடங்கிவிட்டனர். ‘என்னைத்தான் நபஸ்கரித்தாள், என்னைக் கண்டுதான் முறுவலித்தாள்’ என ஒருவர்க்கொருவர் ஆக்ஷேபம் செய்து பரம விரோதிகளாக மாறிச் சண்டையிட்டனர் என்று பழங்கதை ஒன்று வழங்குகிறது. ‘ஸுந்தன், உபஸுந்தன்’ என்ற இரு அஸுரஸஹோதரர்களை அழியச் செய்ய ப்ரஹ்மா இவ்விதமே ஒரு அப்ஸரப் பெண்ணை ஸ்ருஷ்டித்து அனுப்பினதாக புராணவரலாறும் ஒருபக்கம் இருக்கிறது.

ஆனால் முன்னொரு நாள் ‘போஜராஜன்’ ‘ராமாயணசம்பு’ என்னும் நூல்வாயிலாக ஸ்ரீராமசரிதத்தைச் சொல்ல இழிந்தபோது ஆரம்பத்தில் அவன் செய்த நமஸ்காரம் இவ்விதம் விவாதத்தைக் கிளப்பவில்லை. சொல்லழகும் பொருளழகும் போட்டியிடும் அப்ப்ரபந்தத்தில் கவிமறபை யொட்டி தம்மிஷ்டதேவதையை நமஸ்கரிக்க நினைத்த அந்த ராஜகவி தன்னுடைய நமஸ்காரம் இன்னாரைத்தான் சாரும் என்று சர்ச்சைக்கிடமின்றி தக்க சான்றுகளுடன் கூறியுள்ள சமத்காரம் சுவைக்கத்தக்கது. அதுவும் இனவெறி தலைக்கேறி பலவிதமாகப் பெருகியுள்ள இந்நாளில், அந்நாள் வாழ்ந்த, சரித்ரப்ரஸித்திபெற்ற, ஸாம்ராஜ்யாதிபதியான போஜமஹாராஜன்போன்ற மேதாவிகள் எவ்விதம் கருதி வந்தனரென்பது நமக்குத் தெரியவரும்போது பெரும் வியப்பு உண்டாகாமல் போகாது.

போஜன் என்னும் அக்கவிராஜன் கூறுகிறான். ‘என்னூலைக் கேட்கக்கூடியுள்ள பெரியோர்களே! இதோ நான் நமஸ்காரம் செய்கிறேன். யாருக்கு என்று கேட்கிறீர்களோ? சிறிது பொறுங்கள். உங்களையே இடையில் சில சிறு கேள்விகள் கேட்கிறேன். பிறகு யாருக்கு நமஸ்காரம் என்று தெரிந்துகொள்வீர்கள். உலகில் உயர்வு எதனால் கிடைக்கிறது? நற்பயன் பெற எது வழி? யோசித்துச்சொல்லுங்கள். நற்செயல் புரிபவன் நற்பயன் பெறுவான். தர்மம் செய்து ஒருகாலும் தாழ்ச்சியடையார். ஆகையால் உயர்கதியடைய தர்மமே வழி என்று நீங்கள் கூறியாக வேண்டும். தர்மம் என்று ஏதோ சிலவற்றைத் தான் நாம் குறிப்பிடுகிறோம் என்று நினைக்க வேண்டாம். தர்மமல்லாத சில செய்கைகளினாலேயும் மனிதன் உயர்நிலை பெறுகிறானே என்றும் நீங்கள் சங்கை கொள்ளவேண்டாம். தர்மம் என்ற சொல் விரிவான அர்த்தமுள்ளது. அர்த்தபுஷ்டி கொண்டது. ஸப்ஸ்க்ருதபாஷையைத் தவிர இவ்விதம் நற்செய்கைகளைக்குறிக்க ‘தனிச்சொல்’ வேறுபாஷைகளில் கிடையாது. ஆகையால் உயர்நிலையையடைய ஹேதுவாய் உள்ளதத்தனையும் தர்மமே’ என்று தர்மத்துக்கு லக்ஷணம் கொண்டோமானால் எல்வித சங்கையும் எழ வழியில்லை.

இனி யுங்களை இரண்டாவதாக ஒரு கேள்வி கேட்கிறேன். மனிதன் அடையும் உயர்நிலை என்பது எது? இப்பொழுது சிலரிடம் நாம் காணும் நிலைகளை உயர்நிலைகளாக கருதலாமா? இதற்கு நாம் சரியான விடை கண்டோமானால், இதற்கு ஹேதுவானது தர்மம் என்று நாம் நினைப்பதிலும் தவறு செய்தவராகமாட்டோம். ஆகையால் எது மனிதனுக்கு உயர்ந்த நிலை? எது தாழ்ந்த நிலை? என்று நாம் முந்தர தீர்மானிக்கவேணும். இவ்விதம் தீர்மானம் செய்ய நமக்கு எது துணையாகும்? என்று இப்போது நீங்கள் கூறல் வேண்டும்.

ஆம்! நீங்கள் கூறப்போவது எனக்குத் தெரிந்துவிட்டது. 'நன்றிது, தீயதிது' எனப் பகுத்தறிய, பழமறையாகிய வேதசாஸ்த்ரங்களே விரகு ஆகும் என்று சொல்லுகிறீர்கள். இது முற்றிலும் உண்மையே. ஈச்வரனைப் போல் ஆதி அந்தமற்று, எத்தேசத்திலும் எக்காலத்திலும்ஒரேவிதமாக உச்சரிக்கப்பட்டு வரும், வேதகீதங்களின் பெருமையை யாரே உரைக்கவல்லவர்? அவைகளைக்கொண்டே நாம் விவேகம் பெறவேண்டியவர்களாகிறோம். ஆனால் மேலும் இங்கு ஒன்று கேட்கிறேன். ஆறு அங்கங்கள், பதினான்கு சாஸ்த்ரங்கள் சூழ, ஸப்தஸாகரங்கள் போல் பரந்து இருக்குள்ள அவைகளின், உண்மைப் பொருளை உணர்ந்துரைக்க எவர் முன் வருவர்? யாருக்கு அவ்விதம் வ்யாக்யானம் செய்ய புத்தி சக்தி முதலியன உண்டு? இதை நாம் நன்கு யோசித்துப் பார்த்தோமானால் ஒரே பதில் தான் கிடைக்கும். பூதேவர்களாகி, தாங்கள் வேதாத்யயநம் செய்வதையும், பிறர்க்கு அதைச் செய்வித்தலையும் தங்கள் தொழிலாகக் கொண்டு, மஹர்ஷிகளின் ஸந்ததியில் தோன்றி, உயர் குலத்தவர் என ப்ரஸித்திபெற்ற ப்ராம்மணர்களாலன்றி வேதம் விரித்துரைக்க வேறு யாரால் முடியும்? ஈச்வரகடாக்ஷம் பெற்ற அப்பெரியோர்களை அணுகி சேவைப்பாய் பரம்பரைச்சொத்தாய் அவர்களுக்குக் கிடைத்துள்ள வேதார்த்த ரத்நங்களை நாம் பெறுவதொன்றே ஸுலபமான வழி ஆகும்.

ஆகையால் என்னுடைய நமஸ்காரங்கள் யாருக்கு என்று இப்பொழுது தெரிகிறது அல்லவா? என்று இவ்விதம் அப்போஜராஜன் சிலாசாஸனமாய் தமது நூலில் கூறுகிறான். உயர்கதி என்பது தர்மத்தினாலேயே ஸாதிக்கப்படவேண்டியதாகையால், அத் தர்மஸ்வரூபத்தை விவரிக்கும் நூல் வேதமே ஆனதால் அதன் உண்மையை உபதேசிக்கும் ஆற்றல் பெற்றவர் ப்ராஹ்மணரே என்பதினால் என்னுடைய ப்ரணாமம் அவர்களைத் தவிர வேறு யாரைச்சாரும்? 'தாங் அந்தரேண நிபதேத் க்வநு மத்ப்ரணாம:' என்கிறான், இங்கு 'நிபதேத்' என்பதின் பொருள்சுவை அநுபவிக்கத் தக்கது. 'அவர்களைத் தவிர்த்து எவரிடம் என்னுடைய நமஸ்காரம் விழும்' என்று பொருளாய், என் நமஸ்காரம் மற்றவர்களுக்கு ஏற்காது. ஏற்கப் பேராசை கொண்டால், அது அவர்களுக்குப்பேரிடி விழுவதற்கு ஒப்பாகும்' என்ற போஜனின் அந்தரங்கக் கருத்து இங்கு வெளியாகிறதல்லவா? தக்கவரை நோக்கியன்றோ நமஸ்காரம் செய்யலாவது? தகாதவருக்கு அது சுமையே. அதனால்தான் எத்தேவதையை நோக்கிச்செய்யும் நமஸ்காரமும் ஸர்வஸ்வாமியாய் எங்கணும் நீக்கமில்லாது நிறைந்திருக்கும் ஸ்ரீமந்நாராயணனையே சேருமென்று ப்ரமாணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீராமாயண சம்புவில் போஜனின் முழு ச்லோகம் வருமாறு:—

உச்சைர்கதி: ஜகதி ஸித்யதி தர்மத: சேத்
தஸ்ய ப்ரமா ச வசனை: க்ருதகேதரை: சேத் ।
தேஷாம் ப்ரகாசநதசா ச மஹீஸுரை: சேத்
தாங் அந்தரேண நிபதேத் க்வநு மத்ப்ரணாம: ॥

[க்ருதகேதரை: வசனை: — நித்யமுள்ளவைகளான வேதவாக்குகளால்]

ஆக இவ்விதம் போஜராஜனின் ப்ராஹ்மண பக்தி இதனால் வெளியாகிறது. இவ்வர்த்தமே சிறிது மாற்றி வேறு வசநத்திலும் கூறப்பட்டுள்ளது. 'தைவாதீநம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம் । தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணா: மம தேவதா:' இக்காலத்தில் இவ்விதம் ப்ராஹ்மண பக்தி இல்லாது போனதற்கு இரு சார்பிலும் குற்றமுண்டு. இதை மற்றொரு ஸமயம் விவரிப்போம்.

பொதுவில் நமஸ்காரம் என்பது உடலால் வணக்கம் செய்வது என்றே கருதப்பட்டுவரினும் அது பரிபூர்ண நமஸ்காரம் ஆகாது. மநஸ்ஸும் வாக்கும் அத்துடன் சேர்ந்தபோதே பூர்ண நமஸ்காரம் ஆகிறது. வாக்கினால் 'நம:' என்று சொல்லி, மனஸ்ஸிலும் தன் தாழ்மையை நினைத்து, தலை வணங்குவதே செம்மையான நமஸ்காரம். இம்மூன்றிலும் மநஸ்ஸுதான் முக்யமான உறுப்பு.

அதன் நினைப்பே ப்ரதானமானது. இங்கு ஒரு பெரியோர் சொன்ன ரஸமான விஷயம் ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. ஸீதாபிராட்டி அசோகவனத்தில் ராவணனுக்கு உபதேசிக்கும் போது 'நிவர்த்தய மநோ மத்த:, ஸ்வஜநே க்ரியதாம் மந:' என்னிடமிருந்து மநஸ்ஸை மாற்றிக்கொள். உன் மனைவிமார்களிடம் அதைச் செலுத்து' என்கிறாள். 'மநஸ்ஸை மாற்றிக் கொண்டால் 'நமஸ்' ஆகிறது. அதாவது நமஸ்காரம் ஆகிறது. 'மநஸ்' என்ற பதம் திருப்பி எழுதப்பட்டால் 'நமஸ்' என்றாகிறதல்லவா? நமஸ் என்றால் நமஸ்காரம் ஆகும். 'அ' என்றாலும் 'அகாரம்' என்றாலும் ஒன்றுவதுபோல். ஆகையால் மநஸ்ஸு மாறினால் நமஸ்காரம் பிறக்கும். மநஸ்ஸு உண்டானால் வழி உண்டு.

—ஃ—

ஸ்ரீ:

செய்திகள்

பாதூரில் 36-வது பட்டம்
ஸ்ரீநிவாஸ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்

நாளது துர்முகி ௵ ஆடி மீ 22௳ திங்கட்கிழமை (புஷ்பநக்ஷத்ரம்) யன்று பாதூரில் ஷ்ரீ ஸ்ரீ அழகியசிங்கர் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ அழகியசிங்கரால் அனுக்ரஹிக்கப்பட்டுவரும் த்ரவ்யஸஹாயத்தைக் கொண்டு 36-வது பட்டம் ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தேறியது. திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு இரண்டு நாட்கள் முன்னதாகவே வேத, ப்ரபந்த, க்ரந்த பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. திருநக்ஷத்ரதினத்தன்று ஸ்ரீப்ரஸந்நவெங்கடேசப்பெருமாள், ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யமங்களவிக்ரஹங்களுக்கு விசேஷத் திருமஞ்சனம் நடந்தேறியது. விசேஷமான அலங்காரத்துடன் வீதி உத்ஸவமும், ஆழ்வார், தேசிகன், பெருமாள், தாயார் ஸந்நிதிகளில் மங்களாசாஸனமும் நடந்தது. பிறகு சாற்றுமுறை, ஸம்பாவனை, ஸ்ரீபாததீர்த்தம், கோஷ்டிவிநியோகம் முதலியன நடந்தன. ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியிலிருந்து வழக்கப்படி அநுக்ரஹித்துவரும் த்ரவ்யத்தைக் கொண்டு ஸ்ரீப்ரஸந்நவெங்கடேசப் பெருமாள் ஸந்நிதி தர்மகர்த்தா வி. ஸுந்தரமய்யங்கார் ஸ்வாமி இந்த உத்ஸவத்தில் ச்ரத்தையெடுத்துக் கொண்டு மிகவும் நன்றாக நடத்திவைத்தார்.

அன்று முதல் தேசக்ஷேமாபிவ்ருத்யர்த்தமாக பாடசாலை ஆசிரியர்களும் வித்யார்த்திகளும் அக்ரஹாரவாஸிகளும் ஏகோபித்து காலை மாலை இரு வேளைகளிலும் விதிப்ரமணமாக 'ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம' பாராயணம் செய்து வருகின்றனர்.

நாளது துர்முகி௵ ஆவணி மீ 4௳ ஞாயிற்றுக்கிழமை இவ்வூர் ஸ்ரீப்ரஸந்ந வெங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தை முன்னிட்டு ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திவ்யமங்கள விக்ரஹ ப்ரதிஷ்டா மஹோத்ஸவம் நடைபெறுகிறது.

டி. எஸ். கோபாலய்யங்கார்,
தலைமையாசிரியர்.

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை,
மேல மாம்பலம்.

ஷ்ரீ பாடசாலையில் கடந்த ஒரு வருடமாக பல பெரியோர்கள் தலைமையில் பலமுறை கூட்டங்கள் மாலோல சபையின் ஆதரவின் கீழ் நடைபெற்றன. இவ்வருடமும் ஷ்ரீ சபையின் ஆரம்பவிழா 30-6-56 திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு ஸ்ரீமான் B. A. பாஷ்யமய்யங்கார் M. A., L. T. ஸ்வாமியின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அச்சமயம் அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:— மாணவர்கள் இளமை முதலே நல்ல வைதிகமுறைகளில் பரிசுத்தமாக இருக்கப் பழகவேண்டும். இளமை

(தொடர்ச்சி 220-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

பாக்யபுரியில் ஸ்ரீ மாலோலவித்வத்ஸதஸ்

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் சாதுர்மாஸ்யஸங்கல்பமஹோத்ஸவம் 22-7-56 ஞாயிற்றுக்கிழமையன்று பாக்யபுரி என்று சொல்லப்பட்டுவரும் ஹைதராபாத் கியான்பாகில் ஆரம்பமாயிற்று. காலை 6 மணிக்கு விச்வரூபமானதும் அபிகமனாராதனம் நடந்தது. 8 மணிக்கு மங்களஹாரத்தியாகி சாற்றுமுறை கோஷ்டி விநியோகமானதும் ஸ்ரீ அழகியசிங்கர் சாதுர்மாஸ்ய ஸங்கல்பமஹோத்ஸவத்திற்கான ஆராதனங்களை நடத்தியாயிற்று. ஸ்ரீ பூவராஹனையும் ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் முதலிய பூர்வாசார்யர்களையும் எழுந்தருளப்பண்ணி ஆராதித்து ம்ருத்ஸங்க்ரஹணம் ஆனதும் ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. பிறகு திருமுடி விளக்கமானதும் அங்குள்ள நடவாபியில் மாத்யாஹ்னிகஸ்நானமானதும் ஸகலமான பிருதுகளும் புடைசூழ யதிராஜஸப்ததிஸ்தோத்ர பாடத்துடன் ஸ்ரீ ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. திருவுள்ளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியிலிருந்து வந்திருந்த மரியாதைகளை கஜேந்திரன் மேல் வைத்து சத்ரசாமராதி பிருதுகளுடன் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது. பஞ்சஶாந்தியானதும் சிஷ்யர்களெல்லோரும்

நிவஸந்து ஸதைவ நாத ஶிஷ்யா: ...
தாய-ந்தா | யதாஶக்தி வஸந்து ஶிஷ்யா: ...
க்ஷிஷ்யாஶோ வயம் ... ||

என்று சொல்லித் தேங்காய்களை ஸமர்ப்பித்து தெண்டன் ஸமர்ப்பித்தார்கள். இஜ்யாகால மங்களஹாரத்தியானதும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையவும், ஸ்ரீ வீரராகவனுடையவும் மாலை பரியட்டங்களும் சால்வை பப்பளிதுப்பட்டிகளும் பவித்ரமாலை அப்யஹஸ்தம் திருத்துழாய் முதலான ஸமஸ்த மரியாதைகளும் அருளிப்பாடிட்டு ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர் எல்லோருக்கும் மந்த்ராக்ஷதை அநுக்ரஹித்துவிட்டு ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. மத்யாஹ்னம் விசேஷ ததீயாராதனம் நடந்தது. இந்த மஹோத்ஸவத்திற்கு மதுரை, தஞ்சாவூர், திருக்குடந்தை, ஸ்ரீரங்கம், மதுராந்தகம், சென்னை, திருவுள்ளூர் முதலான விடங்களிலிருந்தும் ஸிகந்தராபாத், ஹைதராபாதிலிருந்தும் பல சிஷ்யர்கள் வந்திருந்தனர்.

பிறகு 2 மணிக்கு கோஷ்டிக்கு சந்தனதாம்பூலங்களானதும் 16 வது ஸ்ரீ மாலோலவித்வத்ஸதஸ் உபக்ரமிக்கப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர் ஸதஸ்ஸை உபக்ரமித்துவைத்துப் பின்வருமாறு அருளிச்செய்தாயிற்று.

'ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்துள்ள கைங்கர்யங்களில் 'ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்' என்பது ஒன்றாகும். ஸ்ரீபாஷ்யத்தை எல்லோருக்கும் ஸ்ரீ ஸந்நிதியிலேயே காலக்ஷேபம் சொல்லி ப்ரவர்த்திப்பித்தலென்பது தற்காலத்தில் ஸாத்யமில்லாததாகும். ஏனெனில் ஸம்ப்ரதாயாதிபேதத்தாலும் காலவைஷம்யத்தாலும் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஸ்ரீ ஸந்நிதியில் காலக்ஷேபம் பண்ண இயலாது. ஸ்ரீ அழகியசிங்கர் (42-வது பட்டம்) இதைத் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்ரீபாஷ்யத்தை ஸதாசார்யஸகாஶத்தில் காலக்ஷேபம் பண்ணிப் பரிசயமுள்ள வித்வான்களெல்லோரையும் ஒன்று சேர்த்து, அவர்களை ஸ்ரீபாஷ்யாதிகரணங்களில் ஒவ்வொரு விஷயமாகச் சொல்லக் கேட்டு உகந்து அவர்களுக்கு உபசரிப்பது இக்காலத்தில் செய்யக்கூடிய ப்ரவர்த்தனம் ஆகும் என்று இந்த ஸதஸ்ஸை ஆரம்பித்தாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸ்தானத்திற்கெழுந்தருளினதும் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமான தைமீ உத்திராடம் ஸமீபித்திருந்தபடியால் அந்த ஸமயத்திலேயே ஸதஸ்ஸை நடத்தவேணுமென்கிற பலாது

ப்ரார்த்தனைப்படி அப்போது ஆரம்பித்து நடந்து வருகிறது. ஸ்ரீ அழகியசிங்கரும் மற்ற திருநக்ஷத்ரகாலங்களில் பாராயணாதிகள் நடக்கவேண்டியிருப்பதாலும் அப்போது அவகாசமிருப்பதாலும் தை மாதத்திலேயே நடத்தி வந்ததுடன் பிற்காலத்தில் வரும் அழகியசிங்கர்கள் இந்த ஸதஸ்ஸைத் தங்களுக்கு இஷ்டமான காலத்தில் நடத்திக்கொள்ளலாம் என்றும் ஸாதித்தாயிருக்கிறபடி. அதை அநுஸரித்தும் தை மாதத்தில் ஸ்ரீ அழகியசிங்காது திருநக்ஷத்திரமஹோத்ஸவத்தை முன்னிட்டுப் பாராயணங்கள் நடப்பதால் ஸதஸ்ஸுக்கு அவகாசம் போராததாலும், ஆடி மீ உத்திராடம் ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்திரமாகையாலும், ஸங்கல்ப மஹோத்ஸவ ஸமயத்தில் ஸஞ்சாரமில்லாமல் ஒரே இடத்தில் 2 மீ எழுந்தருளியிருப்பதால் அவகாசமிருப்பதாலும் இப்போதே நடத்த உத்தேசித்தோம். இந்த ஸதஸ்ஸை நடத்துவது ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்த ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தன கைங்கர்யமாதலால் இதில் பரீக்ஷைகள் நடத்துவதில்லை. ஸம்பாவனையிலும் தாரதம்யம் காட்டுவதில்லை. பலர் உத்தமபண்டிதர்களுக்கும் ஸாதாரண பண்டிதர்களுக்கும் ஸம்பாவனையில் கொஞ்சமாவது தாரதம்யமிருக்கவேண்டுமென்று விஜ்ஞாபித்தபோது, ஸம்பாவனையில் தாரதம்யமுண்டானால் உத்ஸாஹமுண்டாகாதென்றும் ஒரு முறை விஷயம் சொன்னவர்கள் மறுமுறை ஸதஸ்ஸிற்கு வரும்போது உத்தமபண்டிதர்களோடு வாசியற ஸம்பாவனை செய்தார்களே; இந்த வருஷம் மிகவும் நன்றாக விஷயங்களைப் பார்த்துக்கொண்டு போகவேண்டுமென்று உத்ஸாஹத்துடன் ஸ்ரீபாஷ்யத்தில் பரிச்ரமப்படுவார்களென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்தாயிருக்கிறது. மேலும் பத்து தினங்களும் ஸதஸ்ஸில் அவஹிதர்களாக இருப்பதனால் பல அதிகரணவிஷயமாகப் பண்டிதர்கள் செய்யும் விசாரங்களினால் விசேஷமான ஆநந்தாநுபவமும் உண்டாகும். லௌகிகர்கள் (உத்யோகஸ்தர்கள்) வைதிகர்கள் என்று பேதமில்லாமல் யதாக்ரமமாக ஆசார்யர்களிடத்தில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்தவர்கள் எல்லோருக்கும் இந்த ஸதஸ்ஸில் விஷயம் சொல்ல ப்ரவேசமுண்டு. ஆகையால் இந்த ஸதஸ்ஸில் வித்வான்கள் அனைவரும் உத்ஸாஹத்துடன் ஸாவகாசமாக பல அதிகரணங்களில் வாக்யார்த்தங்களைச் சொல்லி ஸ்ரீ மாலோலனை உகப்பித்து ஶரண்யனது அநுக்ரஹபாத்ரர்களாகவேண்டும்.'

முதல் நாள் 3 மணிக்கு ஸதஸ் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர், வித்வான், வடுவூர், ஸ்ரீ. உப. ராமபத்ராசாரியர் ஸ்வாமி 'ஈக்ஷத்யதிகரண'த்தில் வாக்யார்த்தம் சொன்னார். ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தானவித்வான்களும் மதுராந்தகம் ஸம்ஸ்க்ருதகலாசாலையைச்சேர்ந்த பண்டிதர்களும், மற்றும் வெளியிடங்களிலிருந்து வந்த பண்டிதர்களும் பல லௌகிகப்ரமுகர்களும் ஸந்நிஹிதர்களாயிருந்தார்கள். ஸதஸ் 5-30 மணிவரையில் நடைபெற்றது. ராத்திரி பானகாராதனமானதும் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவம் நடந்தது. அப்போது ஸ்ரீ கண்ணன் மாலைகளும் ஆதனூர், புள்ளபூதங்குடி முதலான திவ்யதேசங்களிலிருந்தும் மற்றும் ஸ்ரீ அஹோபிலமடங்களிலிருந்தும் வந்த மரியாதைகளும் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளிப்பாடிட்டு ஸமர்ப்பிக்கப்பட்டது. அனைவருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் பலமந்த்ராக்ஷதைகளை அநுக்ரஹித்தாயிற்று. அன்று ஹைதராபாத் அட்வொகேட், ஸ்ரீ. என் நரஸிம்ஹ ஐயங்கார் பூர்ணமாக ஆராதித்து டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்.

இரண்டாவது நாள் காலை 9 மணிக்கு அபிகமனமானதும் ஸதஸ் கூடியது. ஸ்ரீ. உப. வித்வான், சொக்கனூர், வெங்கடராகவாசாரியர் 'இதரவ்யபதேசாதிகரண'த்திலும், ஸ்ரீ. உப. வித்வான், அத்தி, கிருஷ்ணமாசாரியர் 'கார்யாக்யானாதிகரண'த்திலும் விஷயம் சொன்னார்கள். 11-30 மணிக்கு ஸதஸ் கலைந்தது. பிறகு மாலை 3-30 மணிக்கு நடந்த ஸதஸ்ஸில் ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர், ஸ்ரீ. உப. வித்வான், இஞ்சிமேடு, ராஜகோபாலாசாரியர் 'ஸாம்பராயாதிகரண'த்தில் விஷயம் சொன்னார். 5 30 மணிக்கு ஸபை கலைந்தது.

மூன்றாவது நாள் காலை 9 மணிக்கு அபிகமனாராதனம் முடிந்ததும் ஸதஸ் கூடிற்று. அப்போது திருவஹீந்த்ரபுரம் வித்வான், ஸ்ரீ. உப. ராஜகோபாலாசாரியர் 'ஸர்வத்ரப்ரஸித்தோபதேசா'திகரணத்திலும், நாரணமங்கலம் வித்வான், ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசாரியர் 'அக்ஷராதிகரண'த்திலும். ஸரகூர் வித்வான், ஸ்ரீ. உப. வீரராகவாசாரியர் 'விலக்ஷணத்வாதிகரண'த்திலும் விஷயம் சொன்னார்கள். 11 மணிக்கு ஸதஸ் கலைந்து மாலை 3-30 மணிக்குக் கூடியது. அப்போது மத்யாஹ்னம் பாதியில் நிறுத்தியிருந்த விலக்ஷணத்வாதிகரணத்தில் விஷயவிசாரம் முடிந்த பின் திருக்கோட்டியூர் வித்வான், ஸ்ரீ. உப. ராமானுஜாசாரியர் 'க்ருத்ஸ்னப்ரஸக்த்யதிகரண'த்தில் விஷயம் சொல்ல ஸதஸ் 6 மணிக்குக் கலைந்தது. இரவு 7 மணிக்குப் பானகாராதனமானதும் வேதத்தில் லக்ஷண கநபாடிகளை கநம் வர்ணக்ரமம் முதலியன சொல்லும்படி நியமிக்க அவர்களும் சொன்னார்கள். அப்போது ஹைதராபாத் ப்ரதமமந்திரி, ஸ்ரீ. ராமக்ருஷ்ணராவ் அவர்கள் வந்து ஸ்ரீ அழகிய சிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு ஸதஸில் நடந்த விசாரங்களைக்கேட்டு ஸந்தோஷமடைந்து பலமந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு சென்றார்.

நான்காவது நாள் காலை 9 மணிக்கு அபிகமனமானதும் முதல் நாள் முடிவுறாமலிருந்த க்ருத்ஸ்னப்ரஸக்த்யதிகரண விஷயவிசாரம் முடிந்ததும் வளையபுத்தூர் வித்வான், ஸ்ரீ. உப. ஸம்பத்குமாரவரதாசாரியர் 'ஜகத்வாசித்வா' திகரணத்தில் விஷயம் சொன்னார். 11 மணிக்கு ஸதஸ் கலைந்து மாலை 3-30 மணிக்குக்கூடியது. அப்போது மேல்பாக்கம் வித்வான், ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசாரியர் 'ஸங்க்யோபஸங்க்ரஹா' திகரணத்தில், விஷயம் சொன்னார். ஸதஸ் 6 மணிக்குக் கலைந்தது. அன்றிரவு பானகாராதனமானதும் கநபாடிகள் கநம் சொன்னார்கள். ஐந்தாவது நாள் காலை அபிகமனமானதும் ஸபை கூடிற்று. அப்போது தேவனார்விளாகம் வித்வான், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் 'சாஸ்த்ரயோநித்வா' திகரணத்தில் வாக்யார்த்தம் சொன்னார். 10-30 மணி வரை விஷயவிசாரம் முடியாததால் மத்தியாஹ்னம் ஸதஸ்ஸில் அந்த ஸ்வாமியே விஷயம் சொன்னார். பிறகு தையார் வித்வான், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரியர் 'ஸமதாத்யதிகரண'த்திலும், பாதூர் ஸரளகவி, வித்வான், ஸ்ரீ. உப. ராகவாசாரியர் 'அத்ரதிகரண'த்திலும் விஷயம் சொன்னார்கள். ஸபை 6 மணிக்குக்கலைந்தது.

ஆறாவது நாள் காலை 9 மணிக்கு ஸதஸ் கூடியதும் அத்ரதிகரணத்தில் பாதியில் நிறுத்தியிருந்த விஷயவிசாரம் சொல்லி முடிக்கப்பட்டது. மாலை 3-30 மணிக்கு ஸதஸ் கூடியதும் வித்வான் ஸ்ரீ. உப. தட்டை, லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர் 'காரணத்வாதிகரணத்' திலும், பனமுகை வித்வான், ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசாரியர் 'ப்ரயோஜநவத்வாதிகரணத்' திலும் விஷயம் சொன்னார்கள். 5 30 மணிக்கு விசாரம் முடியுமுன் ஸதஸ் கலைந்தது.

ஏழாவது நாள் காலை 9 மணிக்குஸதஸ் கூடியதும் பாதூர் வித்வான், ஸ்ரீ. உப. ராமபத்ராசாரியர் 'ஸர்வாந்நாநுமத்யதிகரணத்' தில் விஷயம் சொன்னதும் 11 மணிக்கு ஸதஸ் கலைந்து மாலை 3-30 மணிக்குக் கூடியதும் முதல் நாள் பாதியில் நின்ற ப்ரயோஜநத்வாதிகரணவிஷயவிசாரம் முடிந்தது. பிறகு வில்லிவலம் வித்வான், வேதாந்தவாவதூக, ஸ்ரீ. உப. நாராயணாசாரியர் 'ஜிஜ்ஞாஸாதிகரணத்' தில் விஷயம் சொன்னார். 5-30 மணிக்கு ஸபை கலைந்தது.

எட்டாவது நாள் காலை அபிகமனாநந்தரம் ஸதஸ்ஸில் முதல் நாள் பாதி சொல்லியிருந்த ஜிஜ்ஞாஸாதிகணவிஷயவிசாரம் முடிந்த பிறகு ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தான வித்வான், ஸ்ரீ. உப. முக்கூர், ராஜகோபாலாசாரியர் 'ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணத்' தில் விஷயம் சொன்னார். 11 மணிக்கு ஸதஸ் கலைந்து மாலை 3-30 மணிக்கு சிலுக்கூர் வித்வான், ஸ்ரீ. உப. வெங்கடராகவாசாரியர் (ஹைதராபாத் ஸ்ரீகார்யம்) 'ஜிஜ்ஞாஸாதிகரணத்' தில் விஷயம் சொன்னார் காலையில் நடந்த ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணவிஷயமாகப் பல பண்டிதர்கள் சர்ச்சை செய்து விஷயம் சொன்ன பின்பு 5-30 மணிக்குக் கலைந்தது.

ஒன்பதாவது நாள் காலை ஸதஸ்ஸில் ஈஹை வித்வான் ஸ்ரீ. உப. வேதாந்ததேசிகாசாரியர் ‘ப்ராயத்தாதிகரணத்தில்’ விஷயம் சொன்னார். பின்பு வேதலக்ஷணபரீக்ஷை நடந்து ஸதஸ் 11 மணிக்குக் கலைந்தது. மாலை நடந்த ஸதஸ்ஸில் வேதாந்தவித்யார்த்தி புதுக்கோட்டை. ஸ்ரீ. சேஷாத்திரி ‘ஜிஜ்ஞாஸாதிகரணத்’ தில் விஷயம் சொன்னார். 5-30 மணிக்கு ஸபை கலைந்தது.

பத்தாவது நாள் காலை 8-30 மணிக்கு அபிகமனமானதும் ஸதஸ் கூடியது. அப்போது ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீகார்யம், ஸ்ரீ. உப. தையார் வித்வான், ஜோ. ரங்காசாரியர் ஸ்வாமி ‘தததிகமாதிகரணத்’ தில் வாக்யார்த்தம் சொன்னார். பின்பு வேதலக்ஷண பரீக்ஷை நடந்தது. மாலை ஸதஸ்ஸிலும் வேதலக்ஷணம், வர்ணக்ரமாதிகளை கநபாடிகள் சொன்ன பின்பு 6 மணிக்கு ஸதஸ் கலைந்தது. அப்போது ஸ்ரீ அழகியசிங்கர் மறுநாளும் ஸதஸ் நடக்கவேணுமென்று நியமித்தாயிற்று. இந்த வருஷம் ஸதஸ்ஸில் ஸ்ரீ. உப. குரிச்சி, ராமாநுஜாசாரியர், ராமஸ்வாமி ஐயங்கார், மன்னார்குடி, கிருஷ்ணமாசாரியர், (திருப்பதி) கோபாலஸ்ரீநிவாஸாசாரியர், ரங்கநாதாசாரியர், கமலாபுரம், ஸந்தாநகோபாலாசாரியர், (ஸீதாராம்பாக்) முதலான கநபாடிகள் வந்திருந்தனர்.

2-8-56 புதன் கிழமையன்று காலை அபிகமனமானதும் ஸதஸ் கூடிற்று. அப்போது ஸ்ரீ அழகியசிங்கர், இந்த ஸதஸ்ஸில் விஷயம் சொன்ன வித்வான்கள் முன்பு தங்களால் சொல்லப்பட்ட விஷயங்களில் வக்தவ்யாம்ஸம் இருந்தால் அவர்களை முன் வந்து இப்போது சொல்லும்படி நியமித்தாயிற்று. அதன்படி சில வித்வான்கள் முன்பு தாங்கள் சொல்லிய அதிகரணங்களிலேயே விஷயங்களைச் சொன்னார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் அனைவருக்கும் ஸம்பாவனையை(மார்க்சவ்யயமுள்பட)யும் பல மந்த்ராக்ஷதைகளையும் அநுக்ரஹித்து விட்டு ஆரம்பத்தில் தெரிவித்தபடி இந்த ஸதஸானது ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தனத்திற்கென ஏற்படுத்தப்பட்டிருப்பதால் மேல் வருஷங்களில் யதாக்ரமம் காலக்ஷேபம் பண்ணியவர்களனைவரும் வந்து தம் சக்திக்கேற்ப விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்ற தமது திருவுள்ளத்தைக் கூறினதும் ஸதஸ் நன்கு முடிவடைந்தது.

(216-வது பக்கத் தொடர்ச்சி)

யில் இம்முறையைக் கைக்கொள்ளாவிட்டால் வயது முதிர்ந்தபின் கைக்கொள்வது ச்ரமமாக இருக்கும். ஆரோக்யமான வாழ்க்கைக்குப் பரிசுத்தமான நடத்தையே சிறந்தவழியாகும். தெய்வ பக்தியினால் நம்மிடம் காணப்படும் கவர்ச்சி, ஆடை அணிகளால் உண்டாகாது. சிறுவயது முதலே மாணவர்கள் தாராளமாகப் பேசவும் நடிக்கவும் பழகவேண்டும். அப்படிச் செய்தால்தான் பிற்காலத்தில் சிறந்த மேதாவிகளாக விளங்கமுடியும்.

ஐ. ஸ்ரீநிவாஸாசாரியர்,
தலைமையாசிரியர்.

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ப்ரதிஷ்டை, ஸ்ரீரங்கம்.

இப்பவும் ஸ்ரீரங்கம் ஸ்ரீதசாவதாரன் ஸந்நிதியில் சென்றமாதம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் உத்ஸவ மூர்த்தி ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின்பேரில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த உத்ஸவ மூர்த்திக்கும் ஸ்ரீலக்ஷ்மீநாராயணனுக்கும் ஆடி வெள்ளிக்கிழமைகளில் நூதனமாக நிர்மாணிக்கப்பட்ட டோலையில் டோலோத்ஸவம் நடத்தப்பட்டு வந்து இன்று (10-8-56) கடைசி வெள்ளிக்கிழமை மிகவும் நன்றாக பாட்டுகச்சேரியும் நடந்து டோலோத்ஸவம் பூர்த்தியாயிற்று.

ஸ்ரீ அஹோபிலமடத்தில் (கீழ உத்தரவீதி, ஸ்ரீரங்கம்) திருவாடிப்பூரம், காலையில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலிருந்து உள்சர்த்து அலங்காரம், தோசை ப்ரசாதங்கள் வந்து மடத்தில் கோஷ்டி முதலானதுகள் நன்றாக நடந்தது.

அ. நரஸிம்ஹ அய்யங்கார்,
கௌரவ மானேஜர்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஹைதராபாத்தில் கியான்பாக்கிற்கு எழுந்தருளியானதுமே ஆங்காங்கு அவரவர்க்ருஹங்களுக்குப் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதிக்க ஆசைப்பட்டவர்களெல்லாரும் உத்தானத்திற்குப் பிறகு எழுந்தருளப்பண்ணலாமென்கிற உத்தேசத்துடன் போகிகளை அவரவர்கள் ஊருக்கு அனுப்பியாய் விட்டது. ஹைதராபாத்தில் ஒரு பொதுவான ஸ்தலத்தில் உபந்யாஸங்கள், கல்யாணங்கள் முதலியதுகளை நடத்த ஒரு விசாலமான கட்டடம் வேண்டுமென்ற நோக்கத்துடன் அட்வொகேட், ஸ்ரீ என். நரஸிம்ஹ ஐயங்கார் முதலியவர்கள் முக்கியமாக நின்று ப்ரவ்ருத்தித்து ஆரம்பித்த கட்டடம், முடிவில் ‘பாலாஜிபவன்’ என்ற பெயருடன் திருமலை திருப்பதி தேவஸ்தான ஆதிக்கத்தின் கீழ் விடப்பட்டு பெரிய விசாலமான கட்டடமாயும், பக்கத்தில் யாத்ரீகர்கள் தங்குமிடத்துடனும் அமைந்திருக்கிறது. தத்காலம் திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் நடந்து வரும் ‘வேதாந்தவர்த்தநீ’ கலாசாலை அதில் தான் நடந்து வருகிறது. அந்தக் கலாசாலையின் பக்கத்தில் தான் மிக விசாலமான பூமி அமர்த்தப்பட்டு ஸமீபத்தில் அக் கலாசாலை போஜனவிடுதிகள் லக்ஷக்கணக்கில் சிலவு செய்து கட்ட உத்தேசித்து ஜனாதிபதி ஸ்ரீ ராஜேந்திரப்ரஸாத் அவர்களால் அஸ்திவாரக் கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. அவ் வைபவத்திற்கு ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ஆசிச்செய்தியை அபேக்ஷித்தபடியால் ஆசிச்செய்தியனுப்பப்பட்டிருந்தது. அச் செய்தியில் முக்கியமாகக்குறிப்பிட்டதாவது-: *‘ஸ்ரீபாஷ்யத்தில் ‘श्रुतिशिरसि विदीप्ते ब्रह्मणि श्रीनिवासे’ என்றிருப்பதால் ஸ்ரீநிவாஸாநுகம்பையினால் விருத்தியடையக்கூடியதாய் ‘வேதாந்தவர்த்தநீ’ என்ற பெயருள்ள இந்தக் கலாசாலை எல்லா வேதாந்தங்களுக்கும் பொதுவாக வர்த்தகமாக இருப்பதுடன் ஸ்ரீபாஷ்யகாரர் மங்களச்லோகாபிப்ராயத்திற்கு ஒத்து ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்தத்திற்கு விசேஷித்து வர்த்தகமாக இருக்கவேண்டும்’ என்று.

ஸிகந்தராபாத் முனிஸிபல் மேயரும் செல்வாக்குமுள்ளவரான ஸ்ரீ. முகுந்ததாஸ்மாலாநி என்பவரும் அந்தக் கட்டடத்தில் ஒரு நாள் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதிக்க ஆசைப்படுவதாயும், தாங்களும் முதலிலேயே அவ்விடத்திலேயே பெருமாளை எழுந்தருளப் பண்ண யோசனை பண்ணினதாயும், அதைவிட கியான்பாக் மிகவும் சௌகர்யமென்று இங்கே எழுந்தருளப் பண்ணிவிட்டதாகவும் 15-7-56 அன்று கக்ஷிணாயன புண்யகாலத்திலேயே எழுந்தருளவேண்டுமென்றும் ஸ்ரீ. என். நரஸிம்ஹ ஐயங்கார் முதலியவர்கள் மிகவும் பிரார்த்தித்ததன் பேரில் உள்ளூரில் கிடைத்த போகிகளைக் கொண்டு 14-7-56 ராத்திரி புறப்பட்டு அந்த பாலாஜிபவனுக்கு எழுந்தருளியாயிற்று. அதைத் தற்காலம் சிரத்தையுடன் நிர்வஹித்து வரும் ஸ்ரீ. எம். சௌந்தரராஜ ஐயங்கார் மற்றெல்லாருடனும் மிக உத்ஸாஹத்துடன் எதிர்கொண்டழைத்தார்கள். அவ்விடம் ஊருக்கு மத்யபாகத்திலிருப்பதால் அன்று அநேக ஜனங்கள் வந்து பெருமாளை ஸேவித்தார்கள். ஸ்ரீ. முகுந்ததாஸ் மாலானியும் ததீயாராதனையைப்பண்ணிவைத்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். டோலோத்ஸதத்தில் ஸ்ரீ. எம். ஸௌந்தராஜ ஐயங்கார் ஒரு சால்வையைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். அன்றிரவு புறப்பட்டு மறுபடியும் கியான்பாக்கிற்கு எழுந்தருளியாயிற்று. அதைத் தொடர்ந்து ஈக்காடு, ரிடையர்ட் இஞ்ஜினீயர், ஸ்ரீ. வீரராகவ ஐயங்கார் 19-7-56 அன்று த்வாதசியாயும், திருக்கேட்டையாயுமிருப்பதால் தன் க்ருஹத்திற்

* ஸ்ரீ அகியசிங்கர் அனுப்பிய ஆசிச்செய்தி 224-வது பக்கத்தில் பார்க்கவும்.

கும் எழுந்தருளவேண்டுமென்றும் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பெருமாள் திருவடிகளில் பரஸமர்ப்பணம் பண்ணிக்கொள்ள ஆஸ்தையிருப்பதால் அதை ஸங்கல்பம் ஆரம்பமாகும் முன்பே செய்துகொள்ளவேண்டும் என்றும் மிகவும் ப்ரார்த்தித்தார். அவரது பிரார்த்தனையை அங்கீகரித்து முன் போல் உள்ளூர் போகிகளைக்கொண்டே 18-7-56 ராத்ரி அவர் க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கும் விசேஷமாக ஜனங்கள் பெருமாளை ஸேவிக்க வந்திருந்தனர். அவரது மனோரதப்படி பரஸமர்ப்பணம் நடந்தது. அவர் ததியாராதனமும் டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். அன்றிரவு அங்கிருந்து புறப்பட்டு கியான்பாக்கிற்கு எழுந்தருளியாயிற்று.

ஸங்கல்பத்துடன் ஸதஸ்ஸும் ஆரம்பிப்பதையுத்தேசித்து 20-7-56 தினமே அநேக பண்டிதர்களும் சென்னை, மதுரை முதலிய விடங்களிலிருந்து பல பெரிய மனிதர்களும் வந்திருந்தார்கள். அன்று வரக்கூடிய வசதியில்லாதவர்கள் 21-7-56 அன்று வந்தார்கள். ஹைதராபாத்தில் 25-6-56 முதல் மப்பும் மந்தாரமாகவும், தினம் தூரலாகவும் இருந்துகொண்டிருந்தாலும், ராய்ச்சூரிலிருந்து பெருமாள் எழுந்தருளுவதற்கு அதிக இடைஞ்சல் இல்லாமல் மழை விட்டுக்கொடுத்தமாதிரி ஸங்கல்பதினத்தன்றும் காலைமுதல் ஸாயங்காலம் வரையில் மழையில்லாமல் வெயிலும் இருந்தது. எல்லோருக்கும் எல்லாக் கார்யத்திற்கும் ஸௌகர்யமாக இருந்தது. அன்று ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்திரத்துடன் 14-வது பட்டம் ஸ்ரீரங்கநாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரமும் சேர்ந்தது ஒரு விசேஷம். 22-7-56 காலை யதாக்ரமம் அபிகமனம் சாத்துமுறை கோஷ்டி, தீர்த்தம், சடாரி, விநியோகம் வேதபாராயணம் ஆனதும் வழக்கப்படி பூவராஹனையும், விஷ்வக்ஸேனர், ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன், அத்திப்பட்டு அழகியசிங்கர் முதலியவர்களையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் ம்ருத்ஸங்க்ரஹணம் நடந்தது. பிறகு திருமுடிவிளக்கமாகி நீராட்டமான இடத்திலிருந்து வாத்ய கோஷங்களுடன் திருவள்ளூர், புள்ளபூதங்குடி முதலிய எம்பெருமான்களின் மரியாதைகளுடனும் பெருமாள் ஸந்நிதிக்கு யதிராஜஸப்ததி ஸ்தோத்ரபாடகோஷ்டியுடன் எழுந்தருளி திருவாராதனமாகி பஞ்சசாந்திஜபம் நடந்து ஸ்ரீ அழகியசிங்கர் சாதுர்மாஸ்யவ்ரத ஸங்கல்பமும் செய்தருளியாயிற்று. கைங்கர்யபரர்களும் மற்றும் உள்ளூரிலிருக்கிறவர்களும் வெளியூரிலிருந்து வந்தவர்களும் வழக்கப்படி தேங்காய் ஸமர்ப்பித்து அதற்கு ஏற்பட்ட ச்லோகத்தால் ப்ரார்த்தித்து யதாசக்தி ஸம்பாவனைகளும் செய்தார்கள். உடனே மங்களஹாரத்தி நடந்து பெருமாள் மரியாதைகளெல்லாம் க்ரமமாக நடந்தவுடன் ததியாராதனமும் நடந்தது. அன்று ததியாராதனத்தை அட்வொகேட் ஸ்ரீ என். நரஸிம்மய்யங்கார் நடத்திவைத்தார்.

அன்று மத்யானம் 3-மணிக்கு பெருமாள் ஸந்நிதியில் சந்தனம் தாம்பூலம் கோஷ்டியாகி வழக்கப்படி ஸ்வஸ்தி ப்ரார்த்தனையும் நடந்த பிறகு 16-வது வார்ஷிக மாலோலவித்வத் ஸதஸ்ஸை ஸ்ரீ அழகியசிங்கர் உபக்ரமித்து ஸ்ரீபாஷ்யத்தை வாசித்துப் பிரவர்த்திப்பித்தல் என்பதை 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் இம்மாதிரி ஸதஸ்ஸுக்களின் மூலம் ஸ்ரீ பாஷ்யத்தில் அந்வயிப்பவர்களுக்கு சன்மானம் செய்தால், எல்லோருக்கும் ஸ்ரீபாஷ்யத்தை அவர்களுக்கு ருசித்த ஆசார்யர்கள் ஸந்நிதிகளில் முழுவதும் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு இந்த ஸதஸ்ஸில் அந்வயித்து சன்மானம் பெறலாம் என்கிற உத்ஸாஹமேற்படும். அதுதான் எல்லோருக்கும் பொதுவாக நாம் செய்யக்கூடிய 'ப்ரவர்த்தனம்' என்ற திருவுள்ளத்தாலேயே ஸதஸ்ஸில் ஒருவருக்கும் வித்யாஸமில்லாமல் ஒரே ரீதியாக ஸம்பாவனையும் பண்ண திருவுள்ளம்பற்றியாயிருக்கிறது என்பதை ஸாதித்துவிட்டு அந்தத் திருவுள்ளப்படி அந்தந்த வருஷங்களில் அதிகப்படியாக அநேகர் காலக்ஷேபாதிகளைப் பூர்த்தி செய்துகொண்டு ஸதஸ்ஸுக்கு வரவில்லை என்கிற குறை இனியில்லாமல் இனியாவது வைதிகர்கள், லௌகிகர்கள் (அதாவது உத்யோகத்திலிருப்பவர்கள்) என்கிற பேதமில்லாமல்

ஸ்ரீபாஷ்யத்தைக்காலக்ஷேபம்பண்ண அதிகாரமுள்ளவர்கள் எல்லோரும் ஸ்ரீபாஷ்யத்தை யதாக்ரமம், யதாநியமம் பூர்த்தியாகக் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு ஸதஸ்ஸில் அந்வயிக்கவேண்டுமென்று ஸாதித்தாயிற்று. அன்று முதல் 1–8–56 புதன்கிழமை வரையில் 10-நாளும் இரண்டு வேளையும் ஸதஸ்ஸு வாக்யார்த்தங்கள் நடந்துவந்தது. வந்தவர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் விஷயங்களைச் சாவகாசமாகச் சொல்லும்படிக்கு இருந்தது. ஒருவர் சொல்வதை சேர்ந்தார்ப்போல் பலபேர் பலவிதமாக ஆக்ஷேபிக்காமல் ஒவ்வொருவராக ஆக்ஷேபணை செய்யும்படிக்கும் ஒவ்வொரு ஆக்ஷேபணைக்கும் ஸமாதானம் சொல்லும்படிக்கும் கண்டிப்பான ஏற்பாட்டுடன் நடந்தது. ஸலக்ஷண கனபாடிகளும் தங்களுடைய யோக்யதைகளையும் காட்ட உத்ஸாஹத்துடன் இருந்தபடியால் அவர்களையும் உத்ஸாஹப்படுத்த வேண்டி எடுத்துக்கொடுக்கும் பஞ்சாதிகளுக்கு கனம் லக்ஷணங்கள் சொல்லும்படிக்கும், அதில் விஷயவிசாரம் செய்யும்படிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. 1–8–56 காலை அபிகமனம் கோஷ்டியானதும் பெருமாள் ஸந்நிதியில் எல்லா வித்வான்களுக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டு ஸபை நன்றாக முடிந்தது. கியான்பாக்கில் சிறியதும் பெரியதுமாக நாலைந்து வாபிகளும் தங்குவதற்கு விசாலமான இடங்களும் இருக்கிறபடியால் வந்தவர்களுக்குத் தீர்த்தவசதி, இடவசதி ஸௌகர்யமாக இருந்தது.

2–8–56 பதினெட்டாப்பெருக்கை உத்தேசித்து அபிகமனத்தில் பெருமாள் ஓஹோரைகள் கண்டருளினர். அன்று 22-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ரசடகோபமஹா தேசிகன் திருநக்ஷத்ரம் சேர்ந்திருந்தது. 1–8–56 மத்யாஹ்னம் (ஸதஸ்ஸுக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த) பகவத்விஷய காலக்ஷேபமும் 2–8–56முதல் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபமும் உபக்ரமிக்கப்பட்டது. அதன் உபக்ரமத்தின்போது ஸ்ரீ அழகியசிங்கர் கீழ்க்கண்டபடி ஸாதிக்கும்படி இருந்தது. ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை அந்தாதியில் ஐந்தாவது பாசுரத்தில் கல்யாண குணங்களையே உரைக்கின்றபாஷ்பத்தை:- உரைக்கின்றமாமுனியை என்றிருப்பதையும் கடைசி 10-வது பாசுரத்தில் 'அகலாமே மாறனுரை அருத்தமுடன் அனைவர்க்கும் தகவாலே உரைக்கின்ற மாமுனியை' என்ற பாசுரங்களை எடுத்துக் காட்டி ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன் அனுக்ரஹத்தால் இப்பொழுது மேற்படி இரண்டு கிரந்தமும் காலக்ஷேபம் நடந்துவருவதால் அதற்குக் கொஞ்சமும் விச்சித்தியில்லாமல் ஸதஸ்ஸு முடிந்ததும் உடனே காலக்ஷேபம் ஆரம்பிக்கவேண்டியது அவச்யமென்றும் ஆதலாலேயே மத்யாஹ்னமே ஆரம்பிக்கப்பட்டதென்றும் ஸாதிக்கும்படியிருந்தது,

6–8–56ல் 36-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம். 7–8–56 அன்று காமேஸ்வரராவ் மூலம் வெங்கடேசன் என்பவரால் ததியாராதனை நடத்திவைக்கப்பட்டது. 8–8–56ல் ஆண்டாள் திருவாடிப்பூரமும், 26-வது பட்டம் ஸ்ரீரங்கநாதசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம். அன்று காலையில் திருப்பாவைக்குப் பிறகு நாச்சியார் திருமொழிகள் நடந்து கோயில் திருவாய்மொழிகளும் ஸேவிக்கப்பட்டும் பாராயணம் முதலியதுகள் நடந்ததும் சம்பாவனை முதலியது நடந்தது. அன்று ததியாராதனமும் டோலோத்ஸவமும் ஸ்ரீ தாட்டிகொண்டா அனந்தா ரெட்டி அட்வொகேட் நடத்திவைத்தார். 10–8–56ல் எல்லா பெருமாளுக்கும் ஸ்ரீ வடுவூர் சடகோபாச்சாரியரால் திருமஞ்சன கைங்கர்யம் நடத்தப்பட்டது.

(தொடரும்)

ஸ்ரீ அஹோபிலமடத்து வெளியீடுகளெல்லாம் சென்னையில் அடியிற்கண்ட விலாஸத்தில் விற்பனைக்குக் கிடைக்கும். வேண்டுவோர் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ. M. கிருஷ்ணமாசாரியர், பேபர் மெர்ச்சண்ட், 62, பத்ரையன் தெரு, சென்னை–1.

ஷை 4, மஹாலக்ஷ்மி தெரு, தி. நகர்.

ஸ்ரீ:

आशासनपत्रिका

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमदहोबिलमठम्

दिनम्- ३०-६-१९५६.] [मुकाम्- मरिकाल्.

श्री भगवद्रामानुजमुनिभिः श्रीभाष्यकारैः श्रीभाष्यारम्भे "श्रुतिशिरसि विदीप्ते ब्रह्मणि श्रीनिवासे" इति श्रीनिवासस्य श्रुतिशिरसि [वेदान्ते] विदीप्तत्वं प्रतिपादितम् ,

इदानीं तादृशश्रीनिवासस्य दययैव तादृशदेवस्थाननिर्वाहकसमित्या "वेदान्त वर्धिनी" नाम्नी कलाशाला हैदराबाद् राज्ये निर्वाह्यत इत्येतद्युक्ततममुत्पश्यामः ।

वेदान्तविदीप्तत्वं वेदान्तैर्विशेषतः प्रतिपाद्यत्वमेव । प्रतिपाद्येन प्रतिपादकस्य वर्धनमवश्यकर्तव्यं खलु ।

इयं कलाशाला एतद्राज्ये संस्कृतभाषायां, तत्रापि वैदिकमार्गानुसरणे च बद्धश्रद्धैस्सचिववरैः डा० "रामकृष्णराव्" नामभिः आरब्धा । तस्याः कलाशालायाः तथैव प्रसिद्धैः भारतदेशाध्यक्षैः कलाशालामण्टपनिर्माणाय प्रारम्भः (The foundation laying ceremony) क्रियत इति हेतोः परमामोदः ॥

इयं कलाशाला वैदिकमार्गानुसारेण, सर्ववेदान्तानां वर्धिन्यपि पूर्वोक्तश्रीभगवद्रामानुजश्रीसूक्त्यानुगुण्येन विशिष्य विशिष्टाद्वैतवेदान्तवर्धने कृताधिकप्रयत्ना चिरञ्जीविनी भूयादिति विश्वसिमः ॥

इति श्रीनियमनानुसारी
श्रीकार्यं, जो- रङ्गाचार्यः

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, மூலமந்த்ரஸித்த நாமார்ச்சனை

ஸ்ரீ ந்ருஸிம்ஹாஷ்டோத்தரஸ்தோத்ர நாமாவளிகளுடன் கூடியது

திருவள்ளூர் ஸ்ரீ பாலோலமுத்ராலயத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

தேவநாகரி லிபியில் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

இதன் விலை அணா 6

ஓர் விஜ்ஞாபனம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் ஐப்பசி மீ ஸஞ்சிகை வழக்கப்படி "ஆசார்யஜயந்திமல" ராக வெளிவரப்போவதால் அதில் ப்ரசுரிப்பதற்கு வியாஸங்களை பண்டிதர்கள் 5—9—56 தேதிக்கு முன்பு ஸம்பாதகர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம் என்கிற விலாஸத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது. வ்யாஸங்கள் தெளிவாக மையினால் எழுதப்படுவதுடன் பாமரர்களுக்கும் புரியும்படி எளிய தமிழ்நடையில் எழுதப்படவேண்டும். வியாஸங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும். வியாஸங்கள் ஆசார்யர்களது விஷயமாகவோ அவர்களது அருளிச்செயல்பற்றியோ இருத்தல் அவசியம்.

சந்தாதாரர்களுக்கு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் சந்தாதாரர்கள் தங்களது சந்தா பாக்கியை இதுவரையில் செலுத்தாமலிருந்தால் உடனே அனுப்பி உதவுமாறு கோரப்படுகிறது. நம் ஸம்ப்ரதாயாபி விருத்தியில் அக்கரையுள்ள ஒவ்வொரு ஆஸ்திகரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் சந்தாதாரராகி இப் பத்திரிகையை அபிவிருத்தி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

पादुकासहस्रम्

வெளிவந்துவிட்டது

ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம்

(முதல் ஸஞ்சிகை)

நாகரலிபியில் மூலமும் தமிழில் பதவுரையும் கருத்துரையும்

உரையாசிரியர்:—

மீமாம்ஸாகேஸரி, மீமாம்ஸார்ணவ, பண்டிதராஜ, ஸாஹித்யஸாகர,

ஸ்ரீ. உ. வே. D. T. தாதாசார்யஸ்வாமி, M. O. L.

விலை ரூ. 1-4-0

தபாற்செலவு தனி. வியாபாரிகளுக்கு 20% கமிஷன் உண்டு.

ஸரஸகலா நிலையம்

சமயநூல் பிரசுரகர்த்தர் & விற்பனையாளர்

P. B. No. 619. தெற்குமாடவீதி, : : சென்னை-4.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி வரு தக்ஷிணாயனம் வர்ஷ ருது ஸிம்ஹ ௴; 1956 ஆகஸ்டு - ஸெப்டம்பர் ௴]

16-8-56	ஆவணி௴ 1௳	வியாழக்கிழமை	ஸிம்மரவி 24-34; விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
17-8-56	2௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; சுக்ல த்வாதசி திதி.
18-8-56	3௳	சனிக்கிழமை	த்ரயோதசி திதி.
19-8-56	4௳	ஞாயிற்றுக்கிழமை	அதிதி.
21-8-56	6௳	செவ்வாய்க்கிழமை	○பூர்ணிமை; யஜுருபாகர்மா.
22-8-56	7௳	புதன்கிழமை	காயத்ரீஜபம்.
28-8-56	13௳	செவ்வாய்க்கிழமை	வைகாநஸ ஸ்ரீஜயந்தீ.
29-8-56	14௳	புதன்கிழமை	முநித்ரய, பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தீ.
30-8-56	15௳	வியாழக்கிழமை	நவமி-தசமி திதித்வயம்.
31-8-56	16௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
1-9-56	17௳	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
4-9-56	20௳	செவ்வாய்க்கிழமை	●அமாவாஸ்யை.
7-9-56	23௳	வெள்ளிக்கிழமை	ஸாமோபாகர்மா.
12-9-56	28௳	புதன்கிழமை	கேட்டை; 2-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
13-9-56	29௳	வியாழக்கிழமை	மூலம்; 28-வது பட்டம் ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
15-9-56	31௳	சனிக்கிழமை	(பரிவர்த்தன) ஏகாதசி.

[தக்ஷிணாயனம் வர்ஷ ருது கந்யா ௴]

16-9-56	புரட்டாசி௴ 1௳	ஞாயிற்றுக்கிழமை	கந்யாரவி 26-44; ஷடசீதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
19-9-56	4௳	புதன்கிழமை	○பூர்ணிமை.
23-9-56	8௳	ஞாயிற்றுக்கிழமை	மஹாபரணி.
27-9-56	12௳	வியாழக்கிழமை	மத்யாஷ்டமி.
30-9-56	15௳	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி.

—:0:—

SCANNED

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malola Press, 30, Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T, Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.